பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 11 வியாழக்கிழமை 28.09.2023 கதிர் 321

## சர்வதேச நாணய நிதியத்தின்
# நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் தோல்வி
# 2அம் கட்ட நிதிக் கொடுப்பனவு அந்தரத்தில்
## பொருளாதார மறுசீரமைப்புப் பணிகள் பாதிப்பு

**பொருளாதார மீட்சிக்கு அவசியமான இரண்டாவது கட்டக் கொடுப்பனவு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எப்போது கிடைக்கும் என்பது தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. முதற் கட்டக் கொடுப்பனவைத்தொடர்ந்து இலங்கை மேற்கொண்டிருக்கவேண்டிய சீர் திருத்தங்களைச் செய்வதில் இலங்கை அடைந்திருக்கும் தோல்வியை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.**

**இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான முதலாவது மீளாய்வு குறித்த கலந்துரையாடலுக்காக வருகை தந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு கடந்த 14 ஆம் திகதி முதல் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், குறித்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று இலங்கை மத்திய வங்கியில் செய்தியாளர்களைச் சந்தித்தது.** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

கோட்டாபய ராஜபக்ஷ மிச்சம் வைத்துவிட்டுப்போன பதவிக் கதிரையில் அமர்ந்த உடனே புகழின் உச்சியை நோக்கி பறந்த ரணிலின் வரைபு கீழ் நோக்கி படுவேகமாக இறங்கத் தொடங்கிவிட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வுக் கூட்டம் அந்தச் சரிவை மேலும் வேகப்படுத்திவிட்டது போன்றே தோன்றுகின்றது.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து காக்கக்கூடிய மீட்பராகத்தான் ரணில் ஆட்சியைப் பொறுப்பெடுத்தார். சில மாதங்களுக்குள் நெருக்கடியின் தீவிரத்தை அவர் கட்டுப்படுத்தினார் என்பதும் உண்மை. அதனால் அவரது செல்வாக்கு உயர்ந்தது என்பதும் அதன் காரணமாக அவர் ஜனாதிபதித் தேர்தலைக்கூட ☞ 2

## இந்திய மீனவர்கள் 17 பேர் விடுவிப்பு

### 2 சிறுவர்கள் தவிர்ந்தோருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(ந.லோகதயாளன்.)

இலங்கை கடற்பரப்பரப்பிற்குள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 17 பேரை நிபந்தனைகளுடன் விடுவித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தமிழ்நாட்டின், இராமேஸ்வரம் மற்றும் ஜெகதாபட்டிணத்தில் இருந்துசெப்டெம்பர்13மீன்பிடிக்கப் ☞ 2

# பயங்கர சட்டமூலங்கள் இரண்டும் செவ்வாய்யன்று நாடாளுமன்றில்

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும்நிகழ்நிலைகாப்புச் சட்டம்ஆகியனஎதிர்வரும் செவ்வாய்கிழமைநாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால், நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும் இலங்கையில் நிகழ்வுபற்றிய குறித்த சில கூற்றுக்களின் நிகழ்நிலைத் தொடர்பாடலை தடைசெய்வதற்குஏற்பாடு செய்வதற்கும் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகள்மற்றும்மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்குகளின் பயன்பாட்டைத் தடுப்பதற்கும்ஞ இலங்கையில் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும்நிகழ்நிலைஅமைவிடங்களை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் நிகழ்வுபற்றிய பொய்யான ☞ 2

### காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தாவிட்டால்
# 2090இல் யாழ். குடாநாட்டின் சில பகுதிகள் நீரில் மூழ்கும்
### சுற்றாடல் அமைச்சின் செயலர் எச்சரிக்கை

காலநிலை மாற்றப் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தப்படா விட்டால் 2090ஆம்ஆண்டளவில் யாழ். குடாநாட்டின் சில பகுதிகள் நீரில் மூழ்கக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. உவர்நீர்மட்டம்அதிகரித்து விவசாயத்துறை மீது கடுமையானதாக்கத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 101 கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்குஅவர் மேலும்தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் மழை, வெள்ளம், ☞ 8

# திருவையாற்றில் வீடு மீது பெற்றோல் குண்டு வீச்சு



திருவையாற்றில் செவ்வாய்க்கிழமை இரவுவீடுமீதுபெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டம், திருவையாற்றில், வீட்டு உரிமையா ☞ 8

# விரும்பம் இன்றி நிர்ப்பந்தத்தால் நாணய நிதியத்திடம் சென்றோம்

### இப்படிச் சொல்கிறது மொட்டுக் கட்சி

நாட்டின் இளைஞர்களதும், பொதுமக்களினதும்கோரிக்கைக்கு அமைவாகவேசர்வதேச நாணய நிதியத்தினை நாடும் தீர்மானத்தினை பொதுஜனபெரமுனஆட்சி விரும்பமின்றி எடுத்தது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றவளாகத்தில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே ☞ 2

# ரணில் ஜேர்மனிக்கு பறந்தார் பதில் அமைச்சர்கள் நியனம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஉத்தியோக பூர்வபயணமாக நேற்று அதிகாலை ஜேர்மனிக்குப் புறப்பட்டார். அவர் வெளிநாட்டில் இருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதியின் கீழுள்ள அமைச்சுக்களின் பொறுப்பு பதில் அமைச்சர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பதில் பாதுகாப்பு ☞ 8

# மத மோதல்களுள் சிக்கவேண்டாமென மக்களிடம் அறிவுறுத்துவது அவசியம்

### மகா சங்கத்தினரிடம் ஜனாதிபதியின் செயலாளர் வலியுறுத்து

மதரீதியானமோதல்களை ஏற்படுத்த விளைவோரின் முயற்சிகளுக்குள் சிக்கிக்கொள்ளாமலும் இருக்குமாறு மகா சங்கத்தினர் மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுகின்றேன் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தேசிய பௌதீக திட்டமிடற் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று ஜனாதிபதி அலுவலத்தில்நடைபெற்ற பூஜாபூமி பத்திரங்களை வழங்கிவைப்பதற்கான நிகழ்விலேயே ☞ 8

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்குப் பாரப்படுத்த வேண்டும்

### ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கஜேந்திரகுமார் எம்பி

பதினைந்துவருடங்களாகத் தொடரும் நிலைமையை அங்கத்துவ நாடுகள் உற்று நோக்கினால் இலங்கை அரசினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டிய அவசியம் புலப்படும் என்றுதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வு நடைபெற்றுக் ☞ 8

# சனல் -4 நிறுவனத்திடமிருந்து இழப்பீடு கோர வேண்டும்

### சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு

சனல் 4 வெளியிட்ட ஆவணப்படத்தால் ராஜபக்ஷக்களுக்காக ஏற்பட்ட கௌரவப் பாதிப்புக்காக அந்நிறுவனத்திடம்நட்டஈடுகோர வேண்டுமென பொதுஜனபெரமுனவின்நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ளஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி சேவை வெளியிட்ட ஆவணப்படத்துக்கு எதிர்க்கட்சியினர் அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள். குண்டுத் தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்கள் உள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் வெற்றிக்காக குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். அரச பாதுகாப்புபிரதானிசுரேஷ் சலேவுக்கும்பயங்கரவாதி சஹ்ரானுக்குமிடையில் எவ்வித சந்திப்பும் இடம்பெறவில்லைஎன்று சனல் 4 தொலைக்காட்சி சேவையின் முக்கிய தரப்பினர் தற்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

இதுவே உண்மை. ராஜபக்ஷக்களினால் தான் நாட்டு மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்கிறார்கள். மக்களை கொன்று ஆட்சிக்கு வரும் கொள்கை ராஜபக்ஷக்களுக்கு இல்லை என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். ☞ 8

# கஞ்சா உற்பத்தி செய்ய அமைச்சரவை அனுமதி

### இரு வாரங்களுக்குள் வர்த்தமானி வெளியீடு

உள்நாட்டு கஞ்சா உற்பத்திக்கு அமைச்சரவை அனுமதிகிடைத்திருக்கின்றது. இருவாரங்களுக்குள் அதற்கு அமைவான வர்த்தமானிஅறிவித்தல்வெளியிடப்படவுள்ளதாகசுற்றுலாத்துறைபதில்அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும் தெரவித்ததாவது:

இன்று (நேற்று) சர்வதேச சுற்றுலாத் தினமாகும். சுற்றுலாத்துறைஅமைச்சுஅதனை எளிய முறையில் கொண்டாடியது. இந்நாட்டின் சிறந்த சமையல்கலைநிபுணரான பபிலிஸ் ☞ 2

## இனி இது .....

விரைவாக நடத்துவது குறித்துச்சிந்தித்தார்என்பதும் இப்போது கடந்த காலங்கள். இனிரணிலுக்கு அந்த வசந்த காலங்கள் மீண்டும் வருமா என்பது கேள்விக்குறிதான்.

ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் எதிர்பார்த்தபடி சர்வதேச நாணய நிதியக் கடன்உதவியின்இரண்டாம் கட்டம்கிடைப்பது அவ்வளவு இலகுவல்ல என்பது தெளிவாகிவிட்டது. முதல் கட்டக் கொடுப்பனவின் பின்னர் மீளாய்வுக்காக இலங்கை வந்த நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு இலங்கையின் இதுவரையான செயற்பாடுகளை வெளிப்படையாகப் பாராட்டினாலும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவைப் பெறுமளவிற்கு திருப்தியளிப்பதாக இல்லை என்று நெற்றிப் பொட்டில் அறைந்த மாதிரிச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டது.

இந்த மீளாய்வு வெற்றிகரமாக அமையாத நிலையில் அடுத்தடுத்த கட்டக் கொடுப்பனவுகளைப் பெற முடியாது. அந்த நிதி கிடைக்கவில்லை என்றால் பொருளாதார நெருக்கடியிலிருந்துமீள்வதும் கடந்த ஒரு சில மாதங்களில் காணப்பட்ட நிலமையைக் கூடத் தக்கவைத்துக்கொள்வதும் கடினமாகிவிடும். மீண்டும் வரிசை யுகங்களும்பொருட்களின் விலையேற்றங்களும் நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சர்வதேசநாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய நாட்டின் வருவாயை அதிகரிக்க வரிகளை ஆட்சியாளர்கள் அதிகரித்தது. ஆனால் அதன் மூலம் வருவாய்அதிகரிக்கவில்லை. இந்த இடத்தில்தான் அரசு சிக்கலில் மாட்டிக்கொண்டது. எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிட்டாத காரணத்தால் அடுத்தடுத்த கட்டங்களுக்கு முன்னேறுவது சிக்கலாகிவிட்டது. அதற்கும்மேலமாக கடன் மறுசீர மைப்புவேறு சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது. அடுத்த மாதத்தில்வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்பை முடிப்பதாக இலங்கை வாக்குறுதி வழங்கியிருக்கிறது. ஆனால், அது உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க எடுத்த நடவடிக்கையே இன்னும் பிரச்சினைக்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேமலாபநிதிமற்றும்ஊழியர் நம்பிக்கைநிதிஆகியவற்றைப் பயன்படுத்த ஆட்சியாளர்கள் எடுத்தமுடிவுக்குஎதிர்ப்புக்கள் தொடர்ந்து வலுத்து வருகின்றன. அரசின் அந்த முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பு ஒரு பக்கத்தில் சவாலைச் சந்தித்துள்ள நிலையில் அடுத்த மாதத்தில் முடிக்கவேண்டிய வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகளும் இடைநடுவில் கிடக்கின்றன.

பாரிஸ் கிளப், ஜப்பான், இந்தியாஆகியனஇணைந்து வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பைத் திட்டமிட எடுத்த நடவடிக்கைக்கு சீனா ஒத்துழைப்பு வழங்க மறுத்துவிட்டதால் அந்த முயற்சிகளும் இப்போது தடைப்பட்டு நிற்கின்றன. சீனாவின் கடன்மறுசீரமைப்புத் திட்டம் என்னவென்றுமுதலில்தெரியட்டும், அதன் பின்னர் எமது திட்டத்தைப் பரிசீலிக்கலாம் என்று மற்றைய நாடுகள் ஒதுங்கிவிட்டன. இனி அடுத்த மாதம் ரணில் சீனாவிற்குப் பயணமாகி அங்கு எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடிதனக்குச்சாதகமான கடன்மறுசீரமைப்புத் திட்டத்தைப் பெறவில்லை என்றால், நெருக்கடியிலிருந்து அவரையும்நாட்டையும்காப்பாற்ற முடியாமல் போய்விடும். அதற்காக அவர் கொடுக்கப்போகும் விலை என்ன என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

ஏற்கனவே சீனாவை தாஜா பண்ணுவதற்காக, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வைத்து, சீனாவுக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா இணைந்து ஏற்படுத்தியிருக்கக்கூடிய கூட்டைரணில்பகிரங்கமாகக் கண்டித்தார். இது ஒரு கொள்கைத் தவறு என்று விமர்சித்திருந்தார். இதற்கான பயன்பெய்ஜிங்கில்அவருக்கு கடன் மறுசீரமைப்பு என்ற வடிவில் கிடைக்கவில்லை என்றால் அவரது எதிர்காலம் கேள்விக்குறிதான். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் ஜனாதிபதித் தேர்தல்கூட நடக்காமல் போனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிபந்தனைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில் சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் இலங்கைக்கானமுதுநிலைத் தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் புருவர் மற்றும் ஹட்ஸ்சிரினா சுவிட்ஸ் ஷெங்கா ஆகியோர் பங்கேற்றனர்.

இங்கு சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய பசுபசுபிக்திணைக்களத்தின் இலங்கைக்கான முதுநிலை தூதுக்குழுவின் தலைவர் பீற்றர்புருவர்தெரிவித்ததாவது:

நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, உள்ளிட்ட பல தரப்பட்டவர்களையும் நாம் சந்தித்து உரையாடியிருந்தோம்.

இலங்கை மக்கள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்து குறிப்பிடத்தக்க மீள்தன்மையை வெளிப்படுத்தியுள்ளனர். கடினமான ஆனால்மிகவும்தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

பொருளாதாரம் உறுதிப்பாட்டுக்கான தற்காலிக அறிகுறிகளைக்காட்டுவதால் இந்த முயற்சிகள் பயனளிக்கின்றன. பணவீக்கம் செப்டம்பர் 2022இல் உச்சமாக இருந்த 70 சதவீதத்திலிருந்து 2023செப்டம்பரில் குறைந்துள்ளது, இந்த ஆண்டு மார்ச்-ஜூன் காலத்தில் மொத்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு 1.5 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது,

மேலும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக் குறையும் குறைந்துள்ளது உறுதிப்பாட்டுக்கானதொடக்க அறிகுறிகள்இருந்தபோதிலும், முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இரண்டாவது காலாண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வருடாவருடம் என்ற அடிப்படையில் 3.1 சதவீதம் குறைந்துள்ளது. அத்தோடு உயர் அதிர்வெண்ணைக் கொண்ட பொருளாதார குறிகாட்டிகள் கலவையான சமிக்ஞைகளை தொடர்ந்து வழங்குவதன்மூலம்வளர்ச்சி வேகம் குறைவாகவே உள்ளது.

இரண்டாவதுகடன்தவணை சம்பந்தமாக கூறுவதாயின் அதற்குரிய கால வரையறை காணப்படவில்லை. அக்கடன் தவணைக் கொடுப்பனவை வழங்குவதாகஇருந்தால்நாம் திருப்தி அடைய வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளனஅதில்முதலாவதாக, அரசு அறிமுகப்படுத்தும் திட்டங்கள் நிறைவேற்றப் படக்கூடியவையாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அடுத்ததாகஇலங்கை அரசு, சர்வதேசநாணயநிதியம் ஆகிய இரு தரப்பினரும் முன்னோக்கி செல்லக்கூடிய கொள்கைகள் தொடர்பில் உறுதிப்பாட்டினைக் கொண்டிருக்கவேண்டும்.

இலங்கை அரசின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் கூறுவதாயின், சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமைவாக இந்த வருடத்திற்குள் அடைய முடியாதுபோன இலக்குகள் காணப்படுகின்றன. இலங்கை அரசு அவற்றை நிறைவேற்றவேண்டியுள்ளது. அதனூடாக எழுகின்ற நிலைமைகளைத் தணிக்க வேண்டியுள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச கடன் வழங்குனர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதன் மூலம் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் அதிகாரிகள் முன்னேற்றம்கண்டுள்ளனர்.

இரண்டாவது கடன் தவணைக் கொடுப்பனவை விடுவிப்பதில் தாக்கம் செலுத்தும் விடயங்களில் முக்கியமானதாகவுள்ளதான கடன் உறுதிப்பாட்டுக்கான வழிவகைஉள்ளதாஎன்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இலங்கை வெளித்தரப்பினருடன் கடன் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கான உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை நிறைவேற்ற முடிந்தால் மட்டுமேநாம்முன்னோக்கிச் செல்ல முடியும். அரசு கட்டமைப்புச் சீர்திருத்தங்களில் அதிகளவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. புதிய மத்திய வங்கிச் சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்புசட்டம் உட்பட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டங்கள் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டால், நிர்வாகத்தை மேம்படுத்த முடியும்.

சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவது பொருளாதார மீட்சி மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கிய பாதையில் நாட்டைக் கொண்டுசெல்வதற்குமிகவும் முக்கியமானது.

அதிகாரிகள் திட்டத்தின் முதன்மை இருப்பு இலக்குகளை அடைந்து, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவுள்ளோம். எவ்வாறாயினும், ஆதாயங்கள் மற்றும் வருவாய் திரட்டல் கடந்த ஆண்டுடன்ஒப்பிடுகையில்மேம்படுத்தப்பட்ட நிலையில் பொருளாதார காரணிகளின் காரணமாக, ஆண்டு இறுதியில் கிட்டத்தட்ட 15 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட முயற்சிகள் இல்லாவிட்டால், நிதிச் சீரமைப்புப் பொறுப்பு பொதுச்செலவில் விழும். இது அத்தியாவசிய பொதுசேவைகளைவழங்கும் அரசாங்கத்தின் திறனை பலவீனப்படுத்தலாம்; மற்றும் கடன்நிலைத்தன்மைக்கான பாதையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

வருவாயைஅதிகரிக்கவும், சிறந்த நிர்வாகத்தைக் குறிக்கவும்,வரிநிர்வாகத்தை வலுப்படுத்துவது, வரி விலக்குகளை அகற்றுவது மற்றும் வரி ஏய்ப்பை தீவிரமாக அகற்றுவது முக்கியமாகதாகும்.

ஆரசநிர்வாகத்தை வலுப்படுத்த எதிர்கால சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு இலக்குகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டபுதியதகுதிகளுடன் நலன்புரி உதவிகளை வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிதி உறுதிப்பாடட்டை உறுதி செய்வதற்காக, வங்கி கண்டறிதல்களை நடத்துதல், வங்கி முறை மூலதனம் மற்றும் பணப்புழக்கப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கான பாதை வரைபடத்தை உருவாக்குதல் மற்றும் வங்கித் தீர்மானக் கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைபொதுக்கடனை மறுசீரமைப்பதற்கு முயற்சிகளை எடுத்து வருவதால், முதல் திட்ட மதிப்பாய்வின் நிர்வாகச் சபையின் ஒப்புதலுக்காக நிதியளிப்பு உத்தரவாத மதிப்பாய்வுகளை நிறைவு செய்ய வேண்டும். இந்த நிதியுதவி உத்தரவாத மதிப்பாய்வுகள், கடன் மறுசீரமைப்புடன் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதில் கவனம் செலுத்தும், அது சரியான நேரத்திலும், திட்டத்தின் கடன் இலக்குகளுக்கு ஏற்ப முடிக்கப்படும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

கேள்வி: புரூவர் அவர்களே நீங்கள் இலங்கை அரசாங்கத்தின் வரிசேகரிப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளை குறிப்பிட்டிருந்தீர்கள் அல்லவா?

பதில்:- வரிசேரிப்பு இலங்கைக்குரிய பணியாகும்.அதுஎமதுதிட்டத்'தின் முக்கிய தூணாகும். தமது செலவீனங்களை ஈடுசெய்வதற்கு அரசுக்கு வரி முக்கியமானதாக அமைகின்றது.

வருமானத்தினை அதிகரித்துக்கொண்டால்தான் அரசு செலவுகளுக்கு முகங்கொடுக்க முடியும். தற்போதைய நிலையில் அரசின் வருமானத்திற்கும் செலவீனங்களுக்கும் இடையில் பெரும்வேறுபாடு உள்ளது.

அரசின் தற்போதைய செலவீனம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19 சதவீமாகும். அதனுடன் ஒப்பிடுகையில் வரிவருமானம் 9 சதவீதமாகும். ஆகவேஇங்கேகாணப்படும் இடைவெளியை நிரப்புதல் வேண்டும். அதற்கான கொள்கை கொண்ட வரி நிருவாகப்பொறிமுறை அவசியமாகின்றது.

வரிவிடுபாடுகளை வழங்குதல், வரி செலுத்துவதை தவிர்த்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது. 2020ஆம் ஆண்டு வரிவிலக்களித்து அரசாங்கம் பெரும் வருமானத்தினைஇழந்தது. அது இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.

கேள்வி: சர்வதேசநாணய நிதியத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகளை மீண்டுமொரு தடவை மாற்றம் செய்ய முடியுமா?

பதில்:- கொள்கை அளவில் அதனை முன்னெடுக்க முடியும். ஆனால் அது மிகப்பெரிய சவாலான விடயமாகும். எமது உடன்பாட்டுத் திட்டத்தில் உள்ள இலக்குகளைஅடையமுடியும் என்றஉறுதிப்பாடே எமக்குத் தேவைப்படுகின்றது. அந்த நோக்கங்களை பல்வேறு வகையில் அடைய முடியும். சிறுசிறு மாற்றங்களை செய்யவும் முடியும்.

கேள்வி:- நாட்டிலிருந்து புத்திஜீவிகளும்,நிபுணர்களும் வெளியேறுகின்றார்கள். நாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ள வரிவருமானம் காரணமாகவே அவர்கள் வெளியேறுகின்றார்கள். நீங்களும், வரிவருமானத்தினால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக கூறியுள்ளீர்கள். ஆகவேவரிவருமானத்தினை அண்மைய காலத்தில் மாறுசீரமைப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளனவா?

பதில்:- வருமானத்திற்கும், செலவீனத்திற்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதற்காகவரிவருமான வசூலிப்பு மறுசீரமைப்பு தேவைப்படுகின்றது. வரிவருமானம்சம்பந்தமாக மக்களுக்கு ஏற்படுகின்ற அழுத்தம் தொடர்பில் எமக்கு புரிதல் உள்ளது.

உண்மையில் இலங்கை மக்கள் வரிவருமானம் காரணமாக மட்டும் பீடிக்கப்படவில்லை அவர்கள் வேறு விடயங்களுக்கும் பீடிக்கப்படவுள்ளது. இதனாலேயே பணவீக்கம் அதிகரித்துள்ளது. இதுசாதாரண மக்களுக்குஒருசுமையாகும்.

## கஞ்சா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வாவுக்கு 'ஜய ஸ்ரீ லங்கா' என்ற பெயரிலான சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அது மிகச் சிறந்த விருதாகும். அவர் கீழ் மட்டத்திலிருந்து கல்கிசை ஹோட்டலொன்றில்பிரதான சமையல்கலைநிபுணர்என்ற அந்தஸ்த்து வரை தன்னை வளர்த்துக்கொண்ட கதை மிகவும் அற்புதமானது. சுற்றுலாத்துறையில் சமையல் கலை நிபுணர்களை மறந்துவிடமுடியாதுஎன்பதால் அவர்களுக்கானஊக்குவிப்புத் திட்டமொன்றும் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் பகுதியில் 10 இலட்சம் சுற்றுலாவிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இவ்வருட இறுதிக்குள் 15 இலட்சம்பேரைவரவழைக்க முடியும். அதற்காக விசேட ஊக்குவிப்புத்திட்டமொன்றை தொடங்கியுள்ளோம்.

வருடத்தின் இறுதிக் காலப்பகுதியிலேயேநாட்டுக்கு சுற்றுலாவிகள் வருகை அதிகமாகஇருக்கும்என்பதால், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருமளவான சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைக்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பிரயாணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்த்திருக்கும் நிலையில், அடுத்த மாதத்தின் இடைப் பகுதியிலிருந்து அவர்களை வரவழைப்பதற்கான ஊக்குவிப்புத் திட்டங்கள் பலவும்முன்னெடுக்கப்படும்.

குறிப்பாக எல்ல, நுவரெலியா, காலி மற்றும் கொழும்பு உள்ளிட்ட சுற்றுலாவிகள் அதிகளவில் நடமாடும் பகுதிகளில் இரவு நேரங்களில் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான ஏற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

நாட்டில் சுற்றுலாஈர்ப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்கவேண்டும். அதற்காகச் சில சட்டத் திட்டங்களை தளர்த்த வேண்டும். சுற்றுலாவிகள் தமதுபணத்தைஎமதுநாட்டில் செலவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க தவறும் பட்சத்தில் நாட்டிற்குவருமானம்கிட்டாது.

அதேபோல், நாட்டுக்கு வரும்சுற்றுலாப்பயணிகளை பாதுகாக்கவேண்டியபொறுப்பு எம்மை சார்ந்துள்ளது. சிலர் செய்யும் தவறான செயற்பாடுகளினால் முழு நாட்டுக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது.

அதனால் சுற்றுலாப் பயணிகளிடத்தில் அதிக தொகையை அறவிடும் உள்நாட்டுவியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது. அத்தோடு பாதிக்கப்பட்டசுற்றுலாவிகளை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்கும் வகையில் செயற்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

சுற்றுலாப் பயணிகளில் பயண வசதிக்காக 'டக்ஸி' சேவைகளை தொடங்க வேண்டியிருக்கிறது. அது தொடர்பிலான சட்டவிரோத செயற்பாடுகளை முறியடிப்பதற்கு அமைச்சு விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்நாட்டின் டொலர் வருமானத்தைஅதிகரிப்பதற்கு உள்நாட்டுகஞ்சாஉற்பத்திக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. இரு வாரங்களுக்குள் அதற்கு அமைவான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டம் ரூபாக்களை ஈட்டுவதாக அன்றி டொலர்களை ஈட்டிக்கொள்வதற்கானதாக அமைய வேண்டும். அதற்கான அதிகார சபையொன்றின் கீழ் ஏற்றுமதி வலயத்திற்கு உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கஎதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டஇவர்கள்இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்ததனால் கைது செய்யப்பட்டனர். மூன்று விசைப்படகுகளைக் கைப்பற்றியகடற்படையினர் அதிலிருந்த 17 மீனவர்களையும்கைது செய்தனர். அவர்களில் இருவர் சிறுவர்கள்.

இவர்களின் வழக்கு நேற்று ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரு சிறுவர்கள் தவிர்ந்த ஏனைய 15 பேர் மீதும் 3 குற்றச் சாட்டுக்களின் கீழ் நீரியல் வளத் திணைக்களம் வழக்கு தாக்கல் செய்தது.

வழக்கை விசாரித்த நீதிவான் ஜே.கஜநிதிபாலன் 15 மீனவர்களிற்கும் 3 குற்றங்களிற்கும்தலா6மாதம் என ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரணசிறைத்தண்டணை விதித்துஅவர்களைவிடுவிக்க உத்தரவு பிறப்பித்தார்.

## விரும்பம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளை சர்வதேச நாணயநிதியத்திடம்செல்லாது தீர்ப்பதற்கே முயற்சிகளை

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர்
Kalaikkathir

# காணி ஒதுக்கீட்டுக்கு எதிராக பொன்னகர மக்கள் போராட்டம்



பொதுத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணியை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியதற்குஎதிர்ப்புத்தெரிவித்து பொன் னகர் மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட் டம், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் கிராமத்தின் வேதா குடியிருப்பு பகுதியிலேயே இவ்வாறு பொதுத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணியை அதிகாரிகள் தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு திடீரென வழங்கியுள்ளனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த காணி பொதுச்சந்தை, விளையாட்டு மைதானம் மற்றும் தபாலகம் உள்ளிட்ட பொது தேவைக்காக அடையாளப் படுத்தப்பட்டிருந்ததாக அவர்கள் கூறுகின்றனர். இந்த நிலையில் தொண்டு நிறுவனம் ஒன்றின் ஊடாக வெளிநாட்டில் இயங்கும் நிறு வனத்திற்கு இந்தக் காணி வழங்கப்பட்டுள்ளதாகவும், கூறப்படுவதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். காணி ஒதுக்கீடு குறித்து அதிகாரிகள் உடனடியாக மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

அவ்விடத்தில்சந்தை, தொடக்க நிலை சுகாதார நிலையம் உள்ளிட்ட சேவை நிலையங்களிற்கு முன்னுரிமைப்படுத்தி காணி வழங்குமாறும் மக்கள் வலியுறுத்துகின்றனர்.

மேலும், தமது பிரதேசத்தில் 24 குடும்பங்களிற்கு காணி வழங்க விண்ணப் பித்துள்ள நிலையில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லைஎன்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இத்தகைய நிலையில் காணிகளை தொண்டு நிறுவனங்கள் ஊடாக வெளிநாட்டவர்களிற்கு வழங்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

காணி ஒதுக்கீட்டுப் பிரச்சினை குறித்து கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரனிடம் வினவியபோது, உயிரிழை எனும் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு விண்ணப்பித்ததற்கு அமைவாக குறித்த அரச காணி அவர்களிற்கு வழங்கப்பட்டது என்று தெரிவித்தார்.

கிராம அமைப்புக்களின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவிக்கின்றார். (113)

# திடீரென மரம் முறிந்து காரில் மேல் வீழ்ந்தது




எம்.எப்.றிபாஸ்

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதி ஒலுவில் பிரதேசத்தில் வீதியிலிருந்த மரம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கார் மீது விழுந்தது. இதனால் போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. தெய்வாதீனமாக காரில் இருந்தவர்களுக்கு எந்தவிதக் காயமும் ஏற்படவில்லை.

# பொது நினைவுச் சின்னம்; தமிழினம் அனுமதிக்காது

## ஐங்கரநேசன் தெரிவிப்பு



ஜனாதிபதிச் செயலகம் போரில் இறந்த இராணுவத்தினர், விடுதலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதாக முடிவெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.

இது தொடர்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளது. தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இந்தக் கலந்துரையாடல் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

ஆனால், அரசதரப்பு எத்தகைய தீவிரங்காட்டினாலும் போரில் உயிரிழந்த அனைவருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும்வரை தமிழினம் அனுமதியாது என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்தார்.

ஜனாதிபதிசெயலகம் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது-நினைவுச் சின்னமொன்றை அமைக்க முற்பட்டிருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்திருக்கும் அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு -

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது.

போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத்தரப்பையும் ஒன்றாக நினைவிற் கொள்ளும் இம்முடிவிற்குத் தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார்கள். இவ்வெதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது, அதனை எவ்வடிவத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கலந்துரையாடல் பொது அழைப்பும் ஊடகங்களின் பங்கேற்பும் இல்லாது நிபுணர்குழு தெரிவுசெய்து அழைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் மட்டுமே இடம்பெற்று வருகின்றது.

போர்முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்து-வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வ சமிக்ஞையையும் அரசதரப்பு வெளிக்காட்டவில்லை. போர்மரபுகளையும் மீறி மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைத்தழித்த அரசதரப்பு, யுத்த வெற்றியைப் பறைசாற்றும் விதமாகப் படைத்தரப்பினருக்கான நினைவுச் சின்னங்களைத் தமிழர்தாயகப் பகுதியெங்கும் அமைத்துள்ளது. ஆனால், அஹிம்சை வழியில் போராடி உயிர்துறந்த திலீபனின் நினைவு கூருதலை சிங்களக் குண்டர்களின் மூலமும், தனது ஏவல் துறையான காவல் துறையின் மூலமும் குழப்பி வருகின்றது.

திலீபனின் நினைவேந்தல் நாள்களிலேயே இனநல்லிணக்கத்தின் பெயரால் பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கான கலந்துரையாடலையும் நிகழ்த்துகிறது. உலகை ஏமாற்றும் அரசாங்கத்தின் இந்நிகழ்ச்சி நிரலுக்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஒப்புதல் வழங்கமாட்டார்கள். -என்றுள்ளது. (05)

# நாட்டில் கொள்ளைக் கும்பல் நடமாட்டம் பொதுமக்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை

பொது இடங்களில் பயணிக்கும் பொழுது உணவு பானங்களை கொடுத்து சுயநினைவை இழக்க செய்து பொது மக்களின் பொருள்களைக் கொள்ளையிட்டு செல்லும் தரப்பொன்று நாட்டில் செயற்பட்டு வருவதாகவும் இவ்வாறான கொள்ளைச்சம்பவங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஓட்டோ சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தைக் கொடுத்து அவரிடமிருந்த பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஓட்டோ சாரதியைப் போலக் காட்டிக்கொண்டு அல்லது ஓட்டோக்களில் பயணிக்கும் பயணி போன்று காண்பித்து ஓட்டோ சாரதிக்கு அல்லது வாடகை அடிப்படையில் பயணிக்கும் பயணிகள் இடத்தில் குறுகிய காலப்பகுதிக்குள் நன்கு உரையாடி அவர்களுக்கு ஒரு வகைபானத்தை அருந்துவதற்குக் கொடுத்து சுயநினைவை இழந்த பின்னர் அவர்களிடம் இருக்கும் பெறுமதியான சொத்துக்களைக் கொள்ளையிட்டு செல்லும் சம்பவங்கள் அண்மையில் அதிகம் பதிவாகியுள்ளன.

இதுபோன்றதொரு சம்பவம் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியிலும் அண்மையில் பதிவாகியிருந்தது. குறித்த பகுதியில் நபர் ஒருவர் ஓட்டோ ஒன்றுக்கு அருகில் இருந்து மயங்கி விழுந்துள்ள சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவத்தின் போது ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த சந்திர மோகன்(வயது 44) என்ற சந்தேக நபரும், திஹாரி பிரதேசத்தைச் சேர்ந்த பர்த் நிப்ராஸ்(வயது 33) எனும் ஒருவரும், மற்றும் அப்துல் சத்தார் மொஹமட் டில்சான் டில்சாத் (வயது 33) எனும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் மூவரும் நாடளாவியரீதியில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் சந்தேக நபர்களுக்கு எதிராக ருவன்வெல்ல, வெல்ல வீதிய, மஹரகம, ஹங்வெல்ல, கம்பஹா, பியகம, வெலிமட, வெயங்கொட உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனவும் அதற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்-யப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

வெலிகம பொலிஸ் பிரிவுகளில் கடந்த 2020 ஆண்டு இதுபோன்ற சம்பவம் மூலம் 80 வயதுடைய நபர் ஒருவர் காணாமல் போயிருந்தார்.

2021 ஆண்டும் இதுபோன்ற 40 வயதுடைய நபர் ஒருவரும் காணாமல் போயுள்ளார். இருப்பினும் இவர்கள் இருவர் தொடர்பில் தகவல்கள் இது-வரையில் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில் இந்த சம்பவங்களுடன் குறித்த சந்தேக நபர்களுக்கு தொடர்பு இருக்கிறதா என்பது தொடர்பிலும் பொலிஸ-ார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எனவே பொது மக்கள் இந்த விடயம் குறித்து அவதானமாக செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (05)

# பதுளையில் 9 குடும்பங்கள் வசித்த லயன் குடியிருப்பில் பெரும் தீ

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யூரி மாப்பாக்கலை தோட்டத்தில் 10 லயன் அறைகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில் பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

திங்கட்கிழமை மாலை சுமார் 7.30 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தால் 6 வீடுகள் முற்றாகவும், 3 வீடுகள் பகுதியளவிலும் தீக்கிரையாகியுள்ளன.

9 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் குறித்த குடியிருப்பில் வசித்து வந்துள்ள நிலையில், அவர்களில் 33 பேர் மாப்பாக்கலை ஞானவாஹினி தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தத் தீவிபத்தால் உடைமைகள் பல தீக்கிரையாகியுள்ள போதிலும் உயிர் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை எனவும் தீயை மிகுந்த போராட்டத்துக்கு மத்தியில் தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து குறித்த மேலதிக விசாரணைகளைப் பதுளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்கள் கிளர்ச்சிதான் ஒரே வழி

யாழ்ப்பாணத்தில்புதிதாகமதுபானசாலைகளைஅமைப்பதற்கு அனுமதிக்க வேண்டாம் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் விடுத்த கோரிக்கை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. கொழும்பு அரசு மதுபானங்கள் ஊடாகக் கிடைக்கும் வரியையே நாட்டின் வருமான வழிகளில் மூன்றாவது பெரும் வழியாக நம்பிக்கொண்டிருக்கும் நிலையில் இந்த நிராகரிப்பு நடந்திருக்காவிட்டால்தான் ஆச்சரியப்படவேண்டும்.

போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு கிழக்கில் போதைப் பழக்கம் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமே இதுவொரு பிரச்சினையாக இருந்தபோதும், வடக்கு கிழக்கில் போரின் போது மிகக் கீழ்மட்டத்தில் இருந்த இந்தப் பிரச்சினை போரி முடிந்த பின்னர் பூதாகாரமாகியிருப்பது கவலைக்குரியது. இதில் போதைப் பொருட்கள் என்று சுட்டப்படும் கஞ்சா, ஹெரோயின், அபின், ஐஸ் போன்றவற்றால் ஏற்படும் சிக்கல்கள் மட்டுமல்ல, குடிநோயால் ஏற்படும் பாதிப்பும் அதிகமாகியிருக்கின்றது.

போர் முடிந்த அடுத்தடுத்த வருடங்களில் வடக்கு கிழக்கில் உச்சத்தைத் தொட்ட ஒரே வரைபு மதுப் பாவனை மட்டுமே. அதிலும் குறிப்பாக நாகரிகக் குடி எனப்படும் 'பியர்' அருந்தும் பழக்கம் எகிறியது. காலப்போக்கில் இந்தப் பழக்கம் பலரையும் குடிநோய்க்கு ஆளாக்கியது. இந்த நிலையில்தான் புதிதாக மதுபானசாலைகள் திறக்கப்படுவது தடுக்கப்படவேண்டும் என்று அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்தியிருக்கிறார். குடாநாட்டின்பலஇடங்களிலும்புதிதாகத்திறக்கப்படவுள்ளமதுபான சாலைகளுக்குமக்கள்எதிர்ப்புத்தெரிவிப்பதும்நடந்துவருவதால் அவர் இந்த யோசனையை முன்வைத்திருக்கக்கூடும்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடந்த குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கூட்டத்திலும், உள்ளூர் அரச நிறுவனங்களில் அனுமதி எதுவும் இன்றி மதுபான சாலைகளைத் திறப்பதற்கு கொழும்பிலிருந்து நேரடியாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இந்தப் பின்னணியிலும் அவைத் தலைவர் புதிய மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படக்கூடாது என்ற யோசனையை முன்வைத்திருக்கக்கூடும். ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள் முன் அந்தக் கோரிக்கை எடுபடுவதற்கு வாய்ப்புகளில்லை என்பதுதான் உண்மை. ஏனெனில் மதுவை வைத்து வருமானத்தைப் எப்படிப் பெருக்குவது என்று அரசு திட்டமிட்டுவரும் நிலையில் அதனை ஊக்கப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில், அரச கொள்கைக்கு எதிரான அவைத் தலைவரின் யோசனை ஏற்கப்பட்டால்தான் ஆச்சரியமானது.

அரசுக்கு வருமானம் கிடைக்கும் வழிமுறைகளில் மூன்றாவது பெரிய வழிமுறையாக மதுபானங்கள் மீதான வரிதான் இருக்கின்றது. பொருளாதார மீட்சிக்கான வழிவகையாக மதுபானங்கள் மீதான வரிகளை அரசு அதிகரித்தது. ஆனால், அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் அரசுக்குக் கிடைக்கவில்லை. இந்த ஆண்டுக்குள் அரசு மதுவரி மூலம் எதிர்பார்த்த வருமானத்தில் முக்கால்வாசியைக்கூட அதனால் திரட்டமுடியாது என்கிற நிலையில், புதிய மதுபான சாலைகளை அது திறப்பதற்கு ஊக்குவிக்குமே தவிர நிறுத்தாது.

மது மூலமான வருமானத்தை அதிகரிப்பதற்கு மதுபானச் சட்டங்கள் போன்றவற்றை தளர்த்தவேண்டும் என்பது அரசுக்குள் இருக்கும் ஒரு சாராரின் மற்றொரு யோசனை. அதாவது, சுற்றுலாவிகளிடம் இருந்து அதிக பணத்தைக் கறக்க மதுவை ஒரு வழியாக பார்ப்பது அரசின் கொள்கை. இரவுக் களியாட்டங்களில் சுற்றுலாவிகளை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களிடம் இருந்து பணத்தைக் கறக்கலாம் என்று அரசு சிந்திக்கிறது. இதற்காக தற்போதுள்ள இரவு 10 மணியுடன் மதுபான நிலையங்கள் மூடப்படவேண்டும் என்கிற சட்டதிட்டங்கள் உட்படப் பலவற்றையும் தளர்த்தவேண்டும் என்கிறார்கள். இதன் மூலம் சுற்றுலாவிகளின் எண்ணிக்கையையும் அவர்களிடம் இருந்து பெறப்படும் பணத்தின் அளவினையும் அதிகரிக்க முடியும் என்பது ஆளும் தரப்பினரின் எதிர்பார்ப்பு.

புதிய மதுச்சாலைகளைத் திறக்கக்கூடாது என்பது ஆளும் தரப்பின் இந்தக் கொள்கை முடிவுக்கு மாறானது என்பதால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் போன்றவற்றில் அத்தகைய தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றோ எடுத்தாலும் செயற்படுத்தப்படும் என்றோ எதிர்பார்ப்பது முட்டாள்தனம். போதைக்கு எதிரான மக்கள் புரட்சி, கிளர்ச்சி ஒன்றே அதை ஒழிப்பதற்கான ஒரே வழி இந்த நாட்டில்.

கூட்டங்களில் கோரிக்கைகள் முன்வைப்பதை விடுத்து அவைத் தலைவர் செய்யவேண்டியதெல்லாம், போதைக்கும் குடிப்பழக்கத்திற்கும் எதிராக மக்களை அணி திரட்டுவதுதான்.

# நீங்களுமா ரணில்....?



உபுல் யோசப் பெர்னான்டோ

**மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக கலந்துகொண்ட முதலாவது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத் தொடர் 2015 செப்டெம்பர். ரணிலின் மாமாவின் பத்திரிகையான 'தி சண்டே டைம்ஸ்' மைத்திரி யின் வருகையை இப்படித்தான் விமர்சித்துள்ளது.**

**நீயுமா சிரிசேனா?**
**நியூயார்க்கில் ராஜபக்சே வழி 06.09.2015**

மைத்திரிபாலவின் நியூயார்க் பயணத்தை மகிந்த ராஜபக்சவின் நியூயார்க் பயணத்துடன் சண்டே டைம்ஸ் ஒப்பிட்டது. 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டதற்கும் எதிர்ப்பு உருவாகியதற்கும் காரணம் மகிந்த அவரது அமைச்சர்கள், அவர்களின் மனைவிகள் மற்றும் ஆலோசகர்கள்



ஆகியோரை அரச செலவில் - பொது நிதியில் - நியூயார்க்கிற்கு அழைத்துச்சென்றதாகும். இந்தப் பயணங்களின் மூலம் பொதுமக்களின் பணம் எவ்வாறு விரயமாக்கப்பட்டது என அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணிலும், எதிர்க்கட்சியில் இருந்த ஐ.தே.கவினரும் பரப்புரை செய்தனர்.

2015 மஹிந்த தோற்கடிக்கப்பட்டு மைத்திரிபால ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அப்போது அவரது நியூயார்க் பயணம் அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. அவர் தனது முதல் பயணமாக நியூயார்க்கிற்கு சென்றார், மனைவிக்குப் பதிலாக தனது மகன் மற்றும் அமைச்சர்களை அழைத்துச் சென்றார்.

அப்போது அவரைப் பார்த்து ''மைத்திரி நீயும் மகிந்த மாதிரியா...?'' என்று ரணிலின் மாமாவின் பத்திரிகையான 'சண்டே டைம்ஸ்' கேட்டது.

“ஐ.நாவில் தஹாம் சிறிசேனா என்ன செய்கிறார்...?”

இவ்வாறு ரணிலின் மாமாவின் 'டெய்லி மிரர்' பத்திரிகை அவரிடம் கேள்வி எழுப்பியது.

ஜனாதிபதி மைத்திரிபால சாதாரண விமானத்தில் நியூயார்க் சென்றபோதிலும், தம்முடன் வந்த தனது மகனின் நியூயார்க் பயணம் குறித்து அவர் எந்த அறிக்கையும் வெளியிடவில்லை. இந்தப் பயணம் தனிப்பட்ட முறையில் அவருக்கு நன்மை பயக்கும் என்றாலும், நாட்டு மக்கள் இதை ஏற்க மாட்டார்கள். என்று டெய்லி மிரர் எழுதியது. 29.09.2015

இதற்கு பதிலளித்த தஹாம் சிறிசேன, தனது தாயாருக்குப் பதிலாகத் தான் இந்தப் பயணத்தில் தந்தையுடன் இணைந்து கொண்டார் என்று தனது முகநூலில் பதிவிட்டார்.

அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானார். அவர் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் ரணில் ஜனாதிபதி ஆக்கப்பட்டார். ஐ.நா. பொதுச் சபையின் இந்த வருடக் கூட்டத் தொடர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகக் கலந்துகொண்ட முதலாவது கூட்டத்தொடராகும். ரணிலுடன் 'டெய்லி மிரர்' மற்றும் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைகளின் உரிமையாளரும் ரணிலின் மைத்துனருமான ருவான் விஜயவர்தன, ரணிலின் நெருங்கிய ஆலோசகர்கள், மொட்டுக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், ஐக்கய மக்கள் சக்தியில் இருந்து பிரிந்த நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் வடிவேல் ஆகியோரும் சென்றிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரையும் இந்தக் குழுவினர் தம்மோடு அழைத்துச் செல்ல முயற்சித்த போதிலும், அவர் கடைசி நேரத்தில் செல்ல மறுத்துவிட்டார்.

விமானத்தில் வர்த்தகவகுப்பு சொகுசு இருக்கைகள், தரமான சொகுசு விடுதிகள் உள்ளிட்ட வசதிகளுடனும் பாதுகாப்புடனும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியூயார்க்கிற்கு அழைத்துச் செல்லும் தொழிலை ஆரம்பித்தவர் மஹிந்த ராஜபக்ஷ. 2010 தனது இரண்டாவதுதவணைக்குஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் மஹிந்த தம்முடன் எதிர்க்கட்சி உறுப்பினரும், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருமான ஜோன் அமரதுங்கவைத் தனது அமெரிக்கப் பயணத்திற்கு அழைத்துச் சென்றார். அதற்கு ஐ.தே.க.விடம் இருந்து கடும் எதிர்ப்புகிளம்பியபோதிலும், கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளை அடக்குவதற்கு மஹிந்தவின் ஆதரவைப் பெற ஜோன் உதவியதால், ஜோனின் மகிந்தவுடனான பயணம் ரணிலால் அடக்கி வாசிக்கப்பட்டது.

மைத்திரி 2015 இல் தனது நியூயார்க் பயணத்தில் ரணிலுக்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தன்னுடன் அழைத்துச் சென்றனர். ரணிலுக்குத் தெரியாமலேயே அவர் இவ்வாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தார். இறுதியில், தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணம் செல்வதற்கு முன்னர் கட்சியிடம் அனுமதி பெற வேண்டும் என அறிவிப்பு வெளியிடப்பட்டாலும், ஐ.தே.க. உறுப்பினர்கள் அதனைப் பொருட்படுத்தாது மைத்திரியுடன் சென்றனர்.

இப்போது ரணிலும் அதே பாணியைத்தான் தேர்தெடுத்துள்ளார். மொட்டு மற்றும் ஐக்கி மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன் பக்கம் சாய்க்க அவர் ஐ.நாவைப் பயன்படுத்துகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆலோசகர்கள் அல்லது உறவினர்கள் என எவராக இருந்தாலும், அவர்கள் ஐ.நா.வுக்குப் பயணம் செய்வது தங்கள் சொந்தப் பணத்தில் அல்ல, மாறாக பொது மக்களின் பணத்தில்தான். நாடு திவாலாகிவிட்டதால், அமைச்சர்களின் அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கைகளை வெளியிட்டதாக ஒவ்வொரு நாளும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ''அப்படியானால் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஐக்கி மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல பணம் எங்கிருந்து வந்தது...?''

ரணில் பிரதமராக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கலந்துகொண்டபோது, அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவரைத் தனியாக வெள்ளை மாளிகைக்கு வரும்படி அழைத்திருந்தார். ரணில் ஐ.நா. கூட்டத்தொடருக்காக அமெரிக்கா சென்றது செப்டம்பர் 2002. புஷ்ஷை சந்திக்க வெள்ளை மாளிகைக்குச் சென்றது நவம்பர் 2003. அங்கு ரணிலுக்கு புஷ் ஓர் அற்புதமான கதையைச் சொன்னார்.

“ஆப்பிரிக்க நாடுகளின் அதிபர்கள் வெளியூர்களில் இருந்து நண்பர்களை ஐ.நா.வுக்கு அழைத்து வருவதை நான் பார்த்திருக்கிறேன், எனக்கு அவர்களுடன் கைகுலுக்கக்கூட மனமில்லை, ஏனென்றால் ஆப்பிரிக்காவில் உணவின்றி தவிக்கும் மக்களுக்கான பணத்தை அவர்கள் இப்படிச்செலவிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்'”

இதுதான் புஷ் ரணிலுக்குச் சொன்ன கதை.

''ரணிலுக்கு இந்தக் கதை ஞாபகம் இல்லையா?''

ரணில் பிரதமராக இருந்த போது ஐ.நா. கூட்டத்தொடருக்காகச் சென்ற சமயம் அவரை அமெரிக்க ஜனாதிபதி சந்தித்தார், பின்னர் தன்னைச் சந்திப்பதற்கான அழைப்பைத் தனியாக விடுத்தார், அந்த அழைப்பை ஏற்று ரணிலும் அங்கு சென்றார். ரணிலுக்குக்கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரங்களே இவையெல்லாம்.

“ரணிலுக்கு ஏன் இப்போது அந்த உயர்ந்த அங்கீகாரம் கிடைக்கவில்லை...?”

அதற்கு முக்கிய காரணம் ரணில் மக்கள் வாக்குகளை இழந்து தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்து ஜனாதிபதிக் கதிரையப் பிடித்த ஒருவர் என்பதுதான். ரணில் புஷ்ஷைச் சந்திக்க 2003இல் சென்றது நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக அல்ல. மக்கள் ஆணையால் ஆட்சிக்கு வந்த பிரதமராக. ஆனால், புஷ்ஷை சந்திக்க ரணில் வெள்ளை மாளிகைக்குச் சென்றபோது, மக்கள் வாக்கு மூலம் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா. ரணில் அமெரிக்கா சென்றிருந்த சமயம் அவரது அமைச்சரவையில் இருந்த மூன்று அமைச்சுக்களைச் சந்திரிகா கைப்பற்றினார்.

அமெரிக்காவோ அல்லது புஷ்ஷோ அதை ஏற்கவில்லை. சந்திரிகா அந்த முடிவை எடுத்து 24 மணி நேரம் கழித்து இந்த

(5ஆம் பக்கம் பார்க்க...)

# நீங்களுமா ரணில்....?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

விடயத்தில் அமெரிக்கா ரணிலடனேயே இருப்பதாக புஷ் கூறினார். சந்திரிக்கா மக்கள் ஆணையுடன் ஜனாதிபதியானவர், அவருக்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்த மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பது தெரியாமல் புஷ் அதனைக் கூறவில்லை. சந்திரிக்காவுக்கு மக்களின் ஆணை இருந்தாலும் நாட்டை ஆள்வதற்கான புதிய ஆணையை மக்கள் ரணிலுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை உணர்த்தவே புஷ் அதனைத் தெரிவித்தார். அதேபோன்று, இன்றுரணிலுக்கு ஜனாதிபதியாகும் பொது ஆணை இல்லை என்பதும் அமெரிக்காவிற்கு சொல்லிக் கொடுக்கப்படவேண்டிய ஒன்றல்ல.

அமெரிக்க அரச வெளியக உளவு அமைப்பான ”சி.ஐ.ஏ. தலைவர், இரகசியமாக இலங்கை வந்தார், அவரது பயணத்தின்போது வீதிகள் எல்லாம் மறிக்கப்பட்டு அவருக்கு இடமளிக்கப்பட்டது...”

”சி.ஐ.ஏ. தலைவர் ரணிலை சந்தித்தார்...”

”ரணில் – அமெரிக்க ஒப்பந்தம்...”

''ரணிலை வீழ்த்த அமெரிக்காவை அனுமதிக்க மாட்டோம்...”

‘‘அமெரிக்காவினால் இலங்கைக்கு டொலர் மழை...”

இது ரணிலின் ஊடக நண்பர்களால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பரப்புரை. ஆனால் ஜனாதிபதியாக ரணிலின் முதல் அமெரிக்கப் பயணத்தில், ரணிலுக்கு அமெரிக்காவிடமிருந்து எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. ஐ.நா. கூட்டத் தொடருடன் இணைந்து நடத்தப்பட்ட மாநாடுகளில், ஆசியப் பெருங்கடலில் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து நடத்திய ‘ஆக்கஸ்’ நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்து அமெரிக்கா மீதான கோபத்தை வெளிப்படுத்தினார் ரணில். அமெரிக்காவிடமிருந்து அவர் எதிர்பார்த்த பதில் கிடைக்காததே அவரது மனக்கசப்புக்குக் காரணம்.

மைத்திரியின் ஐ.நா. பயணத்தின் போது 2015இல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமா, ஐ.நா.வில் வட்டமேசை விவாதம் மற்றும் இரவு விருந்தின்போது மைத்திரியை சந்தித்து 5 முதல் 10 நிமிடங்கள் வரை பேசி நலம் விசாரித்தார்.

“ஏன் ரணிலுக்கு அப்படியொரு வாய்ப்புக்கூடக் கிடைக்கவில்லை...?”

மகிந்தவுக்கு கிடைத்த அதே வாய்ப்பு ரணிலுக்கும் கிடைத்தது. அதாவது, ஐ.நா. மாநாட்டில் அமெரிக்க அதிபரின் விருந்துக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் சபைக்கு வரும் உலகத் தலைவர்கள் அமெக்க அதிபருடன் வரிசையில் நின்று படம் எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்புத்தான் அது. ரணிலுக்கும் அதே வாய்ப்பு கிடைத்தது. மகிந்தவும் வரிசையில் நின்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். அதனை அமெரிக்க அதிபர் மகிந்தவைச் சந்தித்தார் என்று ஊடகங்கள் செய்திகளை விதைத்தன. இதை சவாலுக்குட்படுத்தி அப்போதைய லங்காதீப செய்தித் தாளில் ‘குருட விக்ரஹாயா’ ஒரு கட்டுரை எழுதினார். செப்டம்பர் 30, 2010 அன்று வெளியிடப்பட்ட அந்தக் கட்டுரையின் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

”சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது, அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் சுரண்டல் ஏகாதிபத்தியங்கள் என்று அழைக்கப்பட்டன. அமெரிக்க உதவியின் அடிப்படையில் இந்நாட்டில் இயங்கி வந்த ஃபோர்டு அறக்கட்டளை சி.ஐ.ஏயால் நடத்தப்படும் அமைப்பு என்று சிறிமா பெயரிட்டார். அவர் அதை சி.ஐ.ஏ. குகை என்று அழைத்தார், அதை நாட்டிலிருந்து வெளியேற்றினார். ஆனால் ஒவ்வொரு முறை ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்லும் போதும் அமெரிக்க அதிபரை சந்தித்து இரு நாட்டு பிரச்சினைகள் குறித்து விவாதித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகளை அவர் எவ்வளவு தாக்கினாலும், அமெரிக்க அதிபர் அவரை ஐக்கிய நாடுகள் சபையிலோ அல்லது வேறு எந்த சர்வதேச மாநாட்டிலோ சந்திக்க மறுக்கவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் போலவே மகிந்தவும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை விமர்சன ரீதியாகப் பார்க்கும் தலைவர். ஆனால் ஐ.நாவில் ஏன் மகிந்தவால் ஒபாமாவை சந்திக்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியவில்லை...?



மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் 2006அவரது முதலாவது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கான பயணம் இடம்பெற்றது. அங்கு விருந்தொன்றில் மகிந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சில கணங்கள் சந்திக்க முடிந்தது. ஜார்ஜ் புஷ் மகிந்தவின் காதில் ஏதோ சொல்வது போன்ற புகைப்படம் இலங்கையின் நான்கு மூலைகளிலும் கட்-அவுட்களில் காண்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2007 மற்றும் 2008 பொதுச் சபைக் கூட்டங்களுக்குச் சென்ற மஹிந்தவால் அமெரிக்க ஜனாதிபதிகளைச் சந்திக்கவே முடியவில்லை. 2009 ஒபாமா அதிபராகப் பதவியேற்றார் வழக்கமாக, அமெரிக்காவின் புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், தனது பதவிக் காலத்தில் உலக நாடுகளின் தலைவர்களை ஒருமுறையாவது சந்திப்பார்.

அமெரிக்க ஜனாதிபதிகள் தமது பதவிக் காலத்தில் இலங்கையின் தலைவர்களை குறைந்தது ஒரு தடவையாவது சந்தித்துள்ளனர். ஒபாமா அதிபராகி இரண்டு ஆண்டுகள் ஆகியும் அவர் இதுவரை இலங்கை அரச தலைவரை சந்திக்கவில்லை.

அது ஏன்.?

அதற்குக் காரணம், அமெரிக்கா மகிந்த ஆட்சியின் மீது கோபத்தில் இருந்ததுதான். இலங்கையில் தொடர்ந்து மகிந்த தேர்தல்களில் வெற்றிபெற்றுக்கொண்டிருந்தார், அது அமெரிக்காவுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கவில்லை.

அமெரிக்கா கோபமாக இருந்ததால் அமெரிக்க அதிபருடனான சந்திப்பு வாய்க்காத நிலையில், ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடருக்குச் சென்ற மகிந்தவும் மனைவியும் அமெரிக்க அரச தலைவர் ஒபாமாவுடன் புகைப்படம் எடுத்து, மகிந்தவின் சட்டைப் பையில் அமெரிக்கா இருப்பதைப் போன்ற தோற்றப்பாட்டைக் காட்டவேண்டியிருந்தது”


**குருட விக்ரஹாயா**
**30.09.2016**

புகைப்படத்திற்காக மகிந்தவும் ஒபாமாவும் சந்தித்த சந்திப்பும், புகைப்படத்திற்காக ரணிலும் தற்போதைய அமெரிக்க அதிபர் பைடனும் சந்தித்த சந்திப்பும் ஒன்றுதான். மகிந்தவின் ஊடகங்களும் ரணிலின் ஊடகங்களும் மக்களிடம் அந்தச் சந்திப்புக்கள் குறித்துப் பொய் சொன்னதுதான் பிரச்சினை.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chinese Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

வித்தியா கொலை வழக்கு

# முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு 5 வருட சிறைத் தண்டனை



சப்ரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் 5 வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் கஹவத்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், அதில் பலர் காயமடைந்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கஹவத்த பொலிஸார், குறித்த காலப்பகுதியில் பிரதியமைச்சராக இருந்த பிரேமலால் ஜயசேகரவை கைது செய்ய நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்தநிலையில், அவரை கைதுசெய்ய வேண்டாமென கஹவத்தை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி லலித் ராஜமந்திரிக்கு அழுத்தம் கொடுத்ததாக சப்ரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்தே இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை, கைது செய்ய வேண்டாம் என அழுத்தம் கொடுத்த குற்றத்திற்காக, சப்ரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் 5 வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அதிபர் உட்பட 4 ஆசிரியர்களை உடன் இடமாற்றம் செய்யுங்கள்

## ஹற்றனில் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்



ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட, பொகவந்தலாவ கொர்க்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் உட்பட ஆசிரியர்கள் 4 பேரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு கோரி 200 இற்கும் மேட்பட்ட பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர்களிடையே முறையான ஒழுக்கம் காணப்படுவதில்லை எனவும் ஒரு சில ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கையை சிறப்பாக மேற்கொள்வதில்லை எனவும் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு வருகை தந்த கோட்டக் கல்வி பணிப்பாளர் என். சிவகுமார் மேற்படி விவகாரம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பெற்றோருக்குத் தெரிவித்தார்.

இந்நிலையில் பாடசாலைக்கு புதிய அதிபரை நியமிக்காமல் தற்போது உள்ள அதிபரையே மீண்டும் நியமித்தால் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 24 ஆண்டுகளுக்கு முன் நடந்த பாலியல் கொடூரத்துக்கு சிறை

## தண்டனையுடன் இழப்பீடும் விதித்தது நிதிமன்றம்

தனது உறவினரின் மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஓய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெத்திகே 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

24 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த குற்றத்துக்காக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

2009 ஒகஸ்ட் 1 முதல் 31 ஆம் திகதிக்கு உட்பட காலத்தில் 16 வயதுக்கு உட்பட்ட தனது உறவினரின் மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சட்டமா அதிபரால் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான நீண்ட விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி அரசு தரப்பு நிரூபித்துள்ளதாகவும், அவர் தொடர்புடைய குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார். (05)

# 10 லட்சத்தைத் தாண்டியது சுற்றுலாவிகள் எண்ணிக்கை

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் இன்று வரை இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை பத்து லட்சம் அடையச் செய்யும் வகையில் ஒரு ரஷ்ய பிரஜை மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை வரவேற்கும் முகமாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைபவமொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைக்கு வந்த ரஷ்ய நாட்டவருடன் அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளும் இருந்தனர்.

ரஷ்யாவில் இருந்து ஓமன் நாட்டுக்கு வந்த அவர்கள் பின்னர் மஸ்கட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். *(05)*

# சினோபெக்கின் விநியோகம் தொடக்கம்

இலங்கையில் சினோபெக் நிறுவனத்தின் விநியோக செயற்பாடுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை கொழும்பு, ஙரிலா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இலங்கைக்கான சீனத்தூதுவர் சீ சென் ஹொங் மற்றும் சினோபெக் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யாங் ஜுன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# தளபாட விற்பனை நிலையத்தில் ரூபாய் 75 லட்சம் காசு கொள்ளை

மீகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தளபாட விற்பனை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்த இருவர் ஊழியர்களிடத்தில் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி 75 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பணத்தைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

குறித்த தளபாட விற்பனை நிலையத்தின் உரிமையாளர் மீகொட பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மீகொட, 20 இலக்க கட்டைப் பகுதியில் அமைந்துள்ள தளபாட விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 2 மணி அளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த இருவர் தலைக்கவசம் அணிந்து அங்கிருந்த ஊழியர்களிடத்தில் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் பணியாளர்களை இரண்டாம் மாடிக்கு அழைத்து சென்று பணம் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தின் இரகசிய இலக்கத்தை பெற்றுக்கொண்டு அங்கிருந்து சுமார் 75 லட்சத்துக்கும் அதிக பெறுமதியான பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மீகொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

# நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரின் திடீர் சுற்றிவளைப்பில் பலர் மீது நடவடிக்கை



திருகோணமலையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கிண்ணியா கச்சக்கொடித்தீவு பகுதியில் உள்ள கடை ஒன்றில் விலை பட்டியல் காட்சிப்படுதாமல் விற்பனைக்காக பதுக்கி வைத்த 50 கிலோகிராம் கீரிச்சம்பா அரிசி கைப்பற்றப்பட்டது.

குறித்த சுற்றிவளைப்பு திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேலும், திருகோணமலை நகரில் விலைப்பட்டியலின்றி விற்பனை செய்த மூன்று கடை உரிமையாளர்கள் உட்பட, திருகோணமலை பொது வைத்தியசிலையின் முன்னால் உள்ள கடையில் மென்பானம் போத்தலில் குறிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்த ஒருவருக்கும் எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது .

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேலும் தெரிவித்தனர். (05)

# இரட்டை கொலைக் குற்றச்சாட்டில் ஊடகவியலாளரிடம் விசாரணை

அவிசாவளை தல்துவ பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இருவரைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஒருவரிடம் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஊடகவியலாளருடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்த உண்மைகளையும் ஆராயவுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப்படையினர் நான்கு சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளனர் என அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்குரிய ஊடகவியலாளரை 72 மணிநேரம் தடுத்து வைத்துவிசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதுடன், குறித்த துப்பாக்கிச் சூட்டுசம்பவத்துக்கு தலைமைதாங்கிய டுபாயில் உள்ள 'மன்னா ரமேஷ்' என்ற குற்றவாளிக்கு இரகசியமாக தகவல் வழங்கியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (05)

# பெண்ணைக் கடத்தி கப்பம் பெற முயற்சி

## மாரவில சம்பவத்தில் பெண் உட்பட இருவர் கைது

பெண் ஒருவரைக் கடத்திச் சென்று கப்பம் பெற முயற்சித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவரை மாரவில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, 9 மில்லி மீற்றர் துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கட்டுனேரிய - லான்சிகம பகுதியைச்சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 24 ஆம் திகதி கடத்தப்பட்டார்.

குறித்த பெண்ணின் கணவர், தனது மனைவியை சிலர் கடத்திச் சென்றுள்ளனர் எனவும், அவரை விடுவிக்க பணம் கோரிர் எனவும் மாரவில பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்த மாரவில பொலிஸார் கொச்சிக்கடை -தலுவகொடுவ பகுதியில் உள்ள வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணை மீட்டதுடன் சந்தேகத்தில் இருவரைக் கைது செய்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## விரும்பம்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

எடுத்திருந்தோம்.

ஆனால், நாட்டின் இளைஞர்களும், யுவதிகளும், பொதுமக்களும் ஒன்றிணைந்துசர்வதேசநாணய நிதியத்திடம் செல்லுமாறு வலியுறுத்தினார்கள். அதற்கு அமைவாகவே நாம் சர்வதேசநாணயநிதியத்திடம் செல்லும் தீர்மானத்தினை விரும்பமின்றி எடுத்திருந்தோம்.

சர்வதேச நாணய நிதியத்திடம்செல்கின்றபோது, நலத்திட்டங்களை நிறுத்த வேண்டிய நிலைமைகள் ஏற்படும். அரசாங்க ஊழியர்களை ஐம்பது சதவீதத்தினால் குறைக்க வேண்டி ஏற்படும்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படும் என்பதை அறிந்திருந்து பொதுஜனபெரமுன அதிலிருந்து விலகிச் செல்லவே முனைந்திருந்தபோதும் அனைவரின் கோரிக்கையும் அதற்கு எதிராகவே இருந்தது - என்றார்.

## மத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புக்கமையபுத்த சாசனத்தை பாதுகாக்க அரசு அர்பணிப்போடு செயற்படும்.

நாட்டுக்குள் மற்றைய மதங்களை அனுட்டிப்பதற்கு இடையூறு ஏற்படாத வகையிலும் மத ரீதியான மோதல் களை ஏற்படுத்த விளைவோரின் முயற்சிகளுக்குள் சிக்கிக்கொள்ளாமலும் இருக்குமாறு மக்களை தெளிவுப்படுத்த வேண்டுமென மகா சங்கத்தினரிடத்தில் வேண்டுகோள்விடுகின்றேன்.

வரலாறு தொடர்பில் ஆராயும் மாணவர்கள், கலாநிதிகள், பேராசிரியர்களுக்கான வசதிகளை வழங்க இந்நாட்டின் வரலாறு தொடர்பிலான ஆய்வு மத்திய நிலையம் ஒன்றை உருவாக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கேற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார்.

இதேவேளை, வெல்கம ரஜமஹாவிகாரையின் பத்திரத்தை அம்பிட்டியே சீலவங்ச தேரருக்கும், மீகம்மான விகாரையின் பத்திரத்தை மானின்கமுவே விமலகீர்த்தி ஸ்ரீ சுமனஜோதி தேரருக்கும், கங்கொடவில விகாரையின்பத்திரத்தை கீர்த்தி ஸ்ரீ அமுனுள்ளே ஜினரத்ன தேரருக்கும், பெபிலியானசுனேத்திராதேவி பிரிவெனாவின் பத்திரத்தை வண.மெதகொடஅபேதிஸ்ஸ தேரருக்கும் ஜனாதிபதியின் செயலாளர்வழங்கிவைத்தார்.

அதேபோல்மின்னேரிய மஹசென் விகாரையின் பத்திரத்தை மாதளே உடுகம சித்தானந்த தேரருக்கும், ருவன்வெல் மெதகொட சித்த சத் பத்தினி தேவாலயத்தின் பத்திரத்தை அதன் பொறுப்பாளர் கே.டபிள்யூ.எம். அஜித் சாந்தவுக்கும் ஜனாதிபதியின் செயலாளர்வழங்கிவைத்தார்.

## 2090இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வறட்சி போன்ற காலநிலை மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட முறைப்படியே நிகழ்ந்தன. ஆனால்தற்போது காலநிலை மாற்றங்கள் கணிக்க முடியாத வகையிலேயே நிகழ்கின்றமையே காலநிலை மாறுபாட்டிற்கு முக்கிய காரணமென அறியப்பட்டுள்ளது. இந்த நிலை கட்டுக்கடங்காமல் போனால்மேலும்வானிலை மற்றும் காலநிலை மாற்றங்கள் அதிகரித்து இயற்கைப் பேரிடர்கள் அதிகரிக்கும்.

தொழில் புரட்சியுடன் ஏற்பட்ட புதைபடிவ எரிபொருட்களின் எரிப்பு படிப்படியாக அதிகரித்து தற்போது உச்சத்தை எட்டியுள்ளது. இந்தப் புதைபடிவ எரிபொருட்களை எரிப்பது, குறிப்பாகக் கார்பன் டைஆக்சைடுவெளியேற்றம், காலநிலை மாற்றத்திற்கான முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

இதன் மூலம், உலக வெப்பநிலை அதிகரிப்பு, பனிப்பாறைகள் உருகுதல், கடல்மட்ட உயர்வு, பல்வேறு நாடுகளின் தட்பவெப்ப மண்டலங்களில்பருவநிலை மாற்றங்கள், அதாவது அதிக மழை பெய்யும் பகுதிகளில் மழை மேலும் அதிகரிப்பது மற்றும் வறட்சி பகுதிகளில் வறட்சிஅதிகரிப்பது, பல்லுயிர் பெருக்கத்தில் பெரும் மாற்றங்கள். நடக்கும்

இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு இதன் தாக்கம் மிகஅதிகம். சர்வதேசஅளவில் ஒப்பிடும் போது புதைபடிவ எரிபொருள் எரிப்பு மற்றும் பச்சைவீட்டுவாயுக்கள்மீதான இலங்கையின் தாக்கம் மிகக் குறைவாக காணப்பட்டாலும், சுற்றுச்சூழலுக்கு எல்லைகள் இல்லாததால், பெரிய நாடுகளின் செயல்பாடுகளால் ஏற்படும் பாதிப்புக்களை நாம் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இதன்படி, இந்நிலைமையை கட்டுப்படுத்தப்படாவிட்டால் 2090 ஆம் ஆண்டளவில் யாழ். குடாநாட்டின் சில பகுதிகள் நீரில் மூழ்கக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. உவர்நீர் மட்டம் அதிகரித்து விவசாயத்துறை மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

காலநிலைப் பேரிடர்கள் தொடர்பில் செயற்படுவதற்கு காலநிலை மாற்றம் தொடர்பிலான மாநாட்டில் சர்வதேச ரீதியில் உலக நாடுகள் ஒன்றுபட்டுச் செயற்படுகின்றன. அத்தோடு, காலநிலைப் பேரிடர்கள் தொடர்பிலான தேசிய மட்டத்திலான நிர்ணயிப்புக்களுக்கான ஒத்துழைப்புக்களையும் அனைத்து நாடுகளும் வெளிப்படுத்தின.

காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை மட்டுப்படுத்தல், பாதிப்புக்களுக்கு மத்தியில் வலுவாக எழுச்சி பெறல், பாதிப்புக்களுக்கு ஈடுகொடுத்தல்தொடர்பிலானமுறைமைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. பசுமை இல்ல வாயுக்களைக் குறைப்பதன் மூலம் சூரிய சக்தி, நீர் மற்றும் காற்றாலை மின்சாரம் , புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆகியனதொடர்பில்இலங்கை கவனம் செலுத்த முடியும். அண்மையில் எகிப்தில் நடைபெற்றகாலநிலைமாற்ற மாநாட்டில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலநிலை சுபீட்சத்துக்கானதிட்டத்தினை முன்மொழிந்தார்.

இதன்போது, காலநிலை மாற்றத்தைக் கையாள அவசியமான நிதி, தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றுடன் மாற்றத்தைஏற்படுத்துவதற்கு நிதிப் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற அழுத்தத்தை பலமான நாடுகளுக்கு இலங்கை உள்ளிட்ட சிறிய நாடுகள் வலியுறுத்தியிருந்தன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த மாநாட்டிலும் ஏனைய சர்வதேச மாநாடுகளிலும் இது தொடர்பில்பெருமளவில்வலியுறுத்தியிருந்தார். பல வருட முயற்சிகளின் பலனாக டிசம்பரில் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவிருக்கும் காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான மாநாட்டில், காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கான சர்வதேச நிதியமொன்றை உருவாக்குவதற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுப்பதற்கானஉலகின் மிகப்பெரியநிதியமாகஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற கட்டமைப்பு அமைப்பில் உள்ள உலகளாவிய காலநிலை நிதியமே காணப்படுகின்றது. அதற்கு வருடாந்தம் 100 பில்லியன் டொலர்களைச்வழங்குவதாக உறுதியளித்திருந்தசெல்வந்த நாடுகள் அதனை செய்யத் தவறியுள்ளன.

மேலும், காலநிலை நடவடிக்கை மற்றும் புதுப்பிக்கத்தக்கவலுசக்திக்கு நிதியளிக்க இன்னும் பல வழிகள்உள்ளன. அத்தகைய ஒரு முறையாகவே கார்பன் நிதியம் உள்ளது. பல வருடங்களுக்குமுன்பாகவே, உலகின் 194 நாடுகளால் கார்பன் பொறிமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கார்பன் பொறிமுறையூடாகஇலங்கையின்வருமானத்தைஅதிகரித்துக்கொள்ளும் முயற்சிகளில் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க முன்னோடியாகச் செயற்பட்டார். அந்த பொறிமுறையின் கீழ் இரு நாடுகள் ஒப்பந்த அடிப்படையில் செயலாற்றக் கூடிய இயலுமை காணப்படுவதோடு, ஜப்பானுடன் ஜே. சி. எம் ஒப்பந்தத்திலும் கைசாத்திட்டிருந்தார்.

இதனால் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்காக இலங்கை நிறுவனங்களுடன் இணைந்து ஜப்பான் நிறுவனங்களும் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஜப்பான் நிறுவனங்கள் மாத்திரமன்றி ஜப்பான் அரசும் குறிப்பிடத்தக்க அளவு முதலீட்டை மேற்கொள்ளும்.

மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறைக்காகவே அந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படும். இங்கு டீசலை படிம எரிபொருளாக எரிப்பது குறைக்கப்படுகிறது. அதனாலேயே காபன் வர்த்தகம் உருவானது என்பதோடு தற்போது காபன் வர்த்தகத்திற்கானகேள்வியும் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதிரணில்விக்ரம சிங்கவின் பணிப்புரைக் கமைய, COP 28 உச்சிமாநாட்டில் காலநிலை நீதிக்கான கூட்டாக நாங்கள் பணியாற்றி வருவதோடு, பாதிப்புமற்றும்இழப்பீடுக்கான நிதியம், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான செயற்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின்பரிந்துரைக் கமைய, தேசிய காலநிலை மாற்ற சட்டத்தை தயாரிப்பதற்கானசகலவழிமுறைகளும் இதில்உள்ளடக்கப்பட்டுள்ளன. காலநிலை மாற்றத்துக்கு முன்னுரிமைஅளித்து, உலக நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் புதிய சுற்றாடல் சட்டத்தை தயாரிப்பதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இரண்டுவருடங்களுக்கு முன்பாக தயாரிக்கப்பட்ட தேசிய சுற்றுச்சூழல் செயல் திட்டத்திலும்இந்தவிடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகள் சட்டப்பூர்வமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுக்கப்படும்பட்சத்திலு முழுமையானநன்மைகளை அடைய முடியும்.

இந்தஅனைத்துமுதலீடுகளும் சுற்றாடல் பாதுகாப்பிற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றாடல்பாதுகாப்புக்கள்அதிகரிக்கும்அளவுக்கு காலநிலை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களின் தன்மைகளையும் குறைத்துக்கொள்ள முடியும். அதனை விவசாய, மீன்பிடி உள்ளிட்டபலதுறைகளுக்கும் கிடைக்கும்நன்மை எனவும் சுட்டிக்காட்டமுடியும்-என்றார்.

## ரணில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர்ஷெஹான்சேமசிங்க பதில் நிதி அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப பதில் அமைச்சராகவும், இராஜாங்கஅமைச்சர் அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்கால உலக அரசியல் மற்றும் பொருளாதாரச் சவால்களுக்குத் தீர்வுகாண்பதற்கான உயர்மட்ட முன்னெடுப்பான 'பேர்லின் குளோபல்' மாநாட்டில் பங்கேற்பதற்காகவே ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க ஜேர்மன் சென்றுள்ளார்.

இம் மாநாடு பல நாட்டுத் தலைவர்களின்பங்கேற்புடன் செப்டெம்பர் 28, 29 இரு நாள்களும்நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமாநாட்டின்முதல் நாளன்று அரச தலைவர்கள் கலந்துரையாடலில் தொடக்க உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த மாநாட்டில், ஜேர்மன் அதிபர் ஒலாப் ஸ்கொல்ஸ், பெல்ஜிய பிரதமர் அலெக்சாண்டர் டீ குரூ, கசகஸ்தான் ஜனாதிபதி கெசெம் - ஜோமார்ட் டோகயெவ், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் சார்ள்ஸ் மிஷெல்உள்ளிட்டவர்களுடன் பல நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதாரக் கொள்கைமற்றும்நிதிமயமாக்கல் நிபுணர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். அதேபோல் இந்தக் கலந்துரையாடலில் உலகின் முக்கிய நிறுவனங்கள் பலவற்றின் நிறைவேற்று அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

கிழக்கு ஜேர்மனிய அரச கவுன்ஸில் மற்றும் ஐக்கிய ஜேர்மனியின் பெடரல் சான்ஸலரின்வாசஸ்தளமான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐரோப்பிய முகாமைத்துவ மற்றும்தொழில்நுட்பகல்லூரி (சிறீனிவீ) மண்டபத்தில் இம் மாநாடு நடத்தப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

ஜனாதிபதியின்ஜேர்மனுக்கான தனது இந்தப் பயணத்தின்போது, ஜேர்மன் அதிபர் ஒலாப் ஸ்கொல்ஸ், ஜேர்மனியின் பிரதான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜேர்மன் வணிக,தொழில் சபையின் உறுப்பினர்கள் ஆகியோருடன்சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் நிறைவில் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜேர்மன் அதிபரின் வெளிவிவகார மற்றும்பாதுகாப்பு கொள்கை தொடர்பிலான ஆலோசகர் ஜென்ஸ் பிளொண்டரை சந்தித்து பேச்சு நடத்துவார்.

அதனையடுத்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஜேர்மன் வெளிவிவகார அலுவலகத்தின் இராஜாங்க செயலாளர் தோமஸ் பேகர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்றும் இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான மூத்த ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதி அமைச்சின் ஆலோசகர் பொருளாதார நிபுணர் தெஷால் டி மெல் உள்ளிட்டவர்களும் ஜேர்மனிக்கான இலங்கை தூதுவர் வருணி முத்துகுமாரனவும் இந்த சந்திப்புக்களில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சனல் 4 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனல் 4 தொலைக்காட்சி சேவை வெளிப்படுத்திய ஆவணப்படுத்தால் ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே இதற்காக ராஜபக்ஷக்கள்சனல்4விடம்நட்டஈடு கோர வேண்டும் என்பதை கட்சி என்ற அடிப்படையில் வலியுறுத்துவோம்.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் கன்டா உட்படநாடுகள்தலையிடுவது ஒன்றும் புதிய விடயமல்ல, வழமையானதே. எந்த நாட்டையும் பகைத்துக் கொள்ள வேண்டிய நோக்கம் இலங்கைக்கு இல்லை. நாட்டின்இறையாண்மையை பாதுகாத்துக் கொண்டு சகல நாடுகளுடன் இணக் கமாக செயற்படுவது அத்தியாயசியமானது - என்றார்.

## திருவையாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எருக்கும் அவரது உறவினர்களுக்கும் இடையே அன்றையதினம்பகல்வாய்த்தர்க்கம் இடம்பெற்றத்தைத் தொடர்ந்து இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டதுடன் மட்டுமல்லாது, வீட்டின்வெளிகேற், பூச்சாடிகள் என்பவற்றையும் தாக்குதாளிகள் அடித்து உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர். வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் அடித்து உடைத்துச் சேதப்படுத்திய பின்னர் அதனைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் வீட்டு உரிமையாளர் நேற்று பொலிஸ் நிலையத்தில் சென்று முறையிட்டு விட்டுத் திரும்பும் வழியில் அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (113)

## இலங்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள் தொடர்பில்நேற்றுஇடம்பெற்ற விடயம்-4இன்கீழானபொது விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவருடைய உரையில் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை அரசினால் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டுப் 14 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில்,தமிழர்தாயகமான வடக்கு கிழக்கில் திட்டமிட்ட சிங்கள மயமாக்கல் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் மீள தொடங்கப்பட்டு துரித கதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

குருந்தூர் மலையிலுள் தமிழர்களின் பழமையான வழிபாட்டிடம் அழிக்கப்பட்டு, அவ்விடத்தில் நீதி மன்ற உத்தரவையும் மீறி பௌத்த ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்று சிங்கள மக்கள் வசிக்காத தமிழர் தாயகப்பகுதிகளான நாயாறு, தையீட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல் சமனலங்குளம், கன்னியா வென்னீருற்று போன்ற இடங்களிலும் பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சட்டவிரோதமாகஆலயங்கள்கட்டப்படும் சில இடங்களில் அரச அனுசரணையுடனான சிங்கள் குடியேற்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மயிலந்தமடு, மாதவனை பகுதிகளில் மூன்று லட்சம் கால்நடைகள் பயன்பெறக்கூடிய மேச்சல் நிலங்களில் வசித்தவந்த தமிழர்கள்துரத்தியடிக்கப்பட்டு, நீதிமன்ற உதரவினைமீறி அவ்விடங்களில் சட்டவிரோதமான முறையில் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களான சிங்கள இனத்தவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

மாதுரு ஓயா வலது கரை மேம்பாட்டு திட்டத்தினைப் பயன்படுத்தி இனப்பரம்பலை மாற்றும்விதத்தில்தமிழர்கள் வெளியேற்றப்பட்டுஅவ்விடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

அரசின்மேற்படிஇனவாத நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பினைவெளிப்படுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை மேற்கொள்பவர்களைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய நடவடிக்கைஎடுக்கப்படுகிறது.

இலங்கைஆட்சியாளர்கள் இச்சட்டத்தினை நீக்குவதாக ஜநாமனிதவுரிமைச்சபைக்கு உறுதியளித்திருந்தனர். ஆனால், எனது சகாவான செல்வராசா கஜேந்திரன் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதுடன் அவர் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிட்டதனை இங்கு சுட்டிக்காட்டலாம்.

2012ஆம்ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகஇவ்விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றபோதிலும்இலங்கைஅரசின் நடவடிக்கைகள் எதுவித மாற்றமுமின்றித் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன.

பதினைந்து வருடங்களாகத் தொடரும் இந் நிலைமையை அங்கத்துவ நாடுகள் இனியும் அனுமதிக்கக்கூடாது - என்றார்.

## பயங்கர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூற்றுக்களின் தொடர்பாடலுக்கு நிதியளித்தல் மற்றும் வேறு ஆதரவை ஒடுக்குவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலமாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, பயங்கரவாதச்செயல்களிலிருந்தும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்டவையும்பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளிலிருந்தும் மற்றும் பயங்கரவாதம் என்ற தவறாகவமைகின்ற குறித்தசில குறித்துரைக்கப்பட்ட செயல்களிலிருந்தும் இலங்கையின் தேசியப்பந்தோபஸ்தையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்ளூ இலங்கைக்கு வெளியே

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# வருடத்துக்கு 500 பில்லியன் ரூபாய் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள்

## நாணய நிதியம் கவலை தெரிவிப்பு என்கிறார் மஹிந்தானந்த

தேசிய வருமான வரி திணைக்களம், சுங்க திணைக்களம், மது வரித்திணைக்களம் ஆகியவற்றிடமிருந்து இவ்வாண்டு எதிர்பார்க்கப்படும் வரி வருமானத்தைப் பெற முடியாத நிலைமை காணப்படுகின்றமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் கவலை வெளியிட்டுள்ளது.

எனவே இவற்றில் இடம்பெறும் ஊழல், மோசடிகளை இல்லாதொழித்து எதிர்பார்க்கப்படும் வருமானத்தை ஈட்டும் வகையில் முகாமைத்துவத்திலும், சட்டங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என நாடாளுமன்றத்தின் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

இம்மூன்று திணைக்களங்களும் வருடத்துக்கு 500 பில்லியன் ரூபா நஷ்டத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன எனவும் மஹிந்தானந்த அழுத்கமகே சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் -

இவ்வாண்டில் தேசிய வருமான வரி திணைக்களம் 1667 பில்லியன் ரூபாவையும், சுங்கத் திணைக்களம் 1217 பில்லியன் ரூபாவையும், மதுவரித்திணைக்களம் 217 பில்லியன் ரூபாவையும் அதாவது 3101 பில்லியன்ரூபாவைவருமானமாகப் பெறும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை தேசிய வருமான வரி திணைக்களத்துக்கு 956 பில்லியன் ரூபாவும், சுங்க திணைக்களத்துக்கு 578 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்துக்கு 109 பில்லியன் ரூபாவும் வரி வருமானம் கிடைத்துள்ளது. அதற்கமைய இவற்றிடமிருந்து ஒட்டு மொத்தமாக 1643 பில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது.

கிடைக்கப் பெற்றுள்ள இந்த வருமானத்தில் அடிப்படையில் மதிப்பிடும் போது அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்பட்ட 3101 பில்லியன் ரூபாவில் 2380 பில்லியன் ரூபா



வருமானத்தை மாத்திரமே பெற முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

இதனால் வரி வருமானத்தில் 637 பில்லியன் ரூபா தட்டுப்பாடு ஏற்படக் கூடும். இந்த மதிப்பீடு தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் அதன் கவலையை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் இந்த நிறுவனங்களிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவை சரியான இலக்குடன் பயணித்தால் எதிர்பார்க்கும் வரியைப் பெற்றுக் கொள்ள முடியும். 22 மில்லியன் சனத்தொகை காணப்படும் இந்நாட்டில் 10 சதவீதமானோர் மாத்திரமே வருமான வரியை செலுத்துகின்றனர்.

நாட்டில் 105 000 நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 68 000 நிறுவனங்கள் தொடர்பில் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றில் 15 சதவீதமானவை மாத்திரமே ஒரு ரூபாவேனும் வரி செலுத்தியுள்ளன. நாட்டின் மொத்த வரி வருமானத்தில் 86 சதவீதமான வரி 494 நிறுவனங்களிடமிருந்தே அறவிடப்படுகின்றன.

வருமான, சுங்க மற்றும் மதுவரி திணைக்களங்களை முறையாக கண்காணித்தால் அரச வருமானத்தை 500 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க முடியும். தற்போது சுங்க திணைக்களம் நாளொன்று ஒரு பில்லியன் ரூபா நஷ்டத்திலும் , தேசிய வருமான வரி திணைக்களம் நாளொன்றுக்கு 500 மில்லியன் ரூபா நஷ்டத்திலும், மதுவரி திணைக்களம் நாளொக்கு 10 மில்லியன் ரூபா நஷ்டத்திலும் இயங்குகின்றன. இதன் காரணமாக வருடத்துக்கு 500 பில்லியன் ரூபா நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

மதுவரி திணைக்களம் மாதத்துக்கு 45 - 50 மில்லியன் போத்தல் மதுபானத்தை தயாரிக்கின்றனர். வருடத்தின் ஒட்டுமொத்த தயாரிப்பில் 40 சதவீதமானவை வரி செலுத்தாமல் சட்ட விரோதமாக விநியோகிக்கப்படுகின்றன.

இதனைத் தடுப்பதற்காக 2018 இல் ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் தற்போது சட்ட விரோதமாக அதே போன்ற ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு மதுபான போத்தல்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இதுவரையில் தேசிய வருமான வரி திணைக்களத்தில் 904 பில்லியன் ரூபா அறவிடப்படாத வரி காணப்படுகின்றது. நீதிமன்ற ஆட்சேபனைகளின் காரணமாக இவ்வாறு பாரியதொரு வரித் தொகை அறவிடப்படாமலுள்ளது. எனவே, இவ்வாறான தேக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையிலும், அரச நிறுவனங்களைப் போன்றே தனியார் நிறுவனங்களிடமிருந்தும் நேரடியாக வரி அறவிடும் வகையில் சட்டத்தில் திருத் தங்களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# சல்யூட் அடிக்கவில்லை என்பதற்காக கான்ஸ்டபிளை அறைந்த அதிகாரி

தனக்கு சல்யூட் அடிக்கவில்லை எனக் கூறி, புதிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் காதில் தாக்கினார் என சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர்மீதுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மேல் மாகாண வடக்கு பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட புதியபொலிஸ்கான்ஸ்டபிள் தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புதிய பொலிஸ் கான்ஸ்டபிள் வங்கி ஒன்றின் முன்பாக கடமையில் ஈடுபட்டிருந்தார் எனவும் சீருடையில் வந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு குறித்த கான்ஸ்டபிள் சல்யூட் அடிக்கவில்லை என்பதற்காக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(05)




காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் தொடர்பான சட்டமூலம் வெளியீடு

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் தொடர்பான சட்டமூலம் வர்த்தமானியில்வெளியிடப்பட்டுள்ளநிலையில், நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வளிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகள் அவ்வலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்விஜயதாஸராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதியிடப்பட்டு தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்தொடர்பானசட்டமூலம் திங்கட்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், இலங்கையில் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தைத் ஸ்தாபித்தல், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை எடுத்துக்கூறல், அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் விளைவான செயற்பாடுகளை விளக்கல்ஆகியவற்றைஇந்ததேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச்சட்டமூலம் உள்ளடக்கியுள்ளது.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கு இடையிலும் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை ஊக்குவித்து மேம்படுத்தல், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய கொள்கையொன்றைத் தயாரித்து அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்தல், அனைத்துச் சமூகங்களுக்கு இடையிலும் புரிந்துணர்வு, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவக்கூடிய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான கொள்கைகளையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல், வேறுபட்ட சமூகங்களுக்கு உள்ளேயும் சமூகங்களுக்கு இடையேயும் ஏற்படக்கூடிய பதற்றங்கள் மற்றும் மோதல்களுக்குக் காரணமாக அமையக்கூடிய விடயங்களை கையாள்வதற்கானபரிந்துரைகளை அரசாங்கத்திடம் முன்மொழிதல், நல்லிணக்கம்மற்றும்சகவாழ்வுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடும் அக்கறையுடைய தரப்பினருக்கு உதவியளித்தல், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை அடைந்துகொள்ளும் நோக்கில் ஏதேனும்சட்டத்தின்ஊடாகவோஅல்லது அரசகொள்கையின்பிரகாரமோ ஸ்தாபிக்கப்பட்ட கட்டமைப்புக்களால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கத்துக்கு உதவுதல் என்பனவே இச்சட்டத்தின் குறிக்கோள்களாகும்.

அதேவேளை இச்சட்டத்தின் பிரகாரம் தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் (நல்லிணக்க அலுவலகம்) ஸ்தாபிக்கப்படவேண்டும் எனவும், அதன் தலைமையகம் கொழும்பில் அமைந்திருக்கவேண்டும் எனவும் சட்டமூல வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் அவ்வலுவலகத்தின் பணிப்பாணையை அடைந்துகொள்வதற்கு அவசியமான எண்ணிக்கையிலான பிராந்திய அலுவலகங்களை ஸ்தாபிக்கமுடியுமென அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நல்லிணக்க அலுவலகமானது அமைச்சரால் பெயர் குறிப்பிடப்பட்டு, ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற பதவிவழி உறுப்பினர் ஒருவரையும், அமைச்சரின் பரிந்துரையின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற 10 உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.

இருப்பினும் அந்த 10 உறுப்பினர்களைப் பரிந்துரைக்கும் போது நல்லிணக்க அலுவலகக் கட்டமைப்பு நாட்டின் பல்லினத் தன்மையைப் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்தல், உறுப்பினர்களாகப் பரிந்துரைக்கப்படுவோர் மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச்சட்டம், நல்லிணக்கம் மற்றும் சமூக ஒத்திணைவு, தேசிய ஒற்றுமை, முகாமைத்துவம், கருத்திட்டத் திட்டமிடல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகிய துறைகளில் அனுபவமுடையவர்களாக இருத்தல் மற்றும் அவர்கள் இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகைமையீனத்துக்கு உட்படாதவர்களாக இருத்தல் என்ற 3 காரணிகள் விசேடமாகக் கவனத்திற்கொள்ளப்படவேண்டும். அமைச்சரின் பரிந்துரைக்கு அமைவாக உறுப்பினர் ஒருவரை நல்லிணக்க அலுவலகத்தின் தவிசாளராக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. தவிசாளரின் பதவிக்காலம் நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாகக் காணப்படும்.

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்தல், நல்லிணக்கம் மற்குறும் சகவாழ்வு பற்றிய தேசிய கொள்கையொன்றை வகுத்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்த உதவுதல், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய செயற்பாட்டுத்திட்டமொன்றை வகுத்தல், இன, மத, மொழி, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளின் விளைவாக இன்னல்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நபர்களை அடையாளங்காணல், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு உள்ளிட்ட மோதலுக்குப் பின்னரான கரிசனைகளை எடுத்துரைத்தல், தேசிய ஒருமைப்பாட்டுக்கான தடைகளை அடையாளங்கண்டு, அக்கறையுடையதரப்பினருடனான கலந்துரையாடல்களின் மூலம் அவற்றை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி செயலாற்றிவரும் ஏனைய அமைச்சுக்கள், அரசாங்கத்திணைக்களங்கள், கட்டமைப்புக்களுடன் கூட்டிணைந்து பணியாற்றல் போன்றன இந்த அலுவலகத்தின் பணிகளாகும்.

மேலும், நல்லிணக்க அலுவலகமானது செயலகமொன்றைக் கொண்டிருக்கவேண்டும் என்றும், அவ்வலுவலகத்தின் பணிகளை நிர்வகிக்கும் பொறுப்பு அச்செயலகத்துக்கு வழங்கப்படவேண்டும் என்றும் இச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பணிப்பாளர் நல்லிணக்க அலுவலகத்தினால் நியமிக்கப்படுவதுடன், அவர் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க விவகாரத்தில் தகைமைகளையும் அனுபவத்தையும் உடையவராக இருக்கவேண்டும்.

அதேபோன்று நல்லிணக்க அலுவலக உறுப்பினர்களின் சம்பளங்கள் நாடாளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் அதேவேளை நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் மானியக்கொடைகள் மற்றும் அறக்கொடைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த நல்லிணக்க அலுவலகம் அதன் செயற்பாடுகளுக்கு அவசியமான நிதியைத் திரட்டலாம் என்றும் அச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

## புவியியல் கற்பித்தல் முறை தொடர்பான நூல் வெளியீடு





ந.லோகதயாளன்.

வலிகாமம்கல்விவலயத்தின்மூத்த ஆசிரிய ஆலோசகர் கணேசபிள்ளை சிவகரனின் ”புவியியல் கற்பித்தல் முறைகள் எனும் நூல் நேற்று இணுவில் மத்திய கல்லூரி சரஸ்வதி கலையரங்கில் வெளியிடப்பட்டது .

வலிகாமம் கல்விவலய நிர்வாகத்துறை பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன் தலைமையில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில் துணுக்காய் கல்விவலய அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.ராஜன், மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை கல்வியியலாளர் வே.சேந்தன் ஆகியோர் உட்பட பல ஆசிரியர்கள், அதிபர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## பயங்கர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ்செய்வதற்கு இலங்கை ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும்ழி பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறேதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடையாளங்காண்பதற்காகவும், பற்றுவதற்காகவும், கைதுசெய்வதற்காகவும், தடுத்து வைப்பதற்காகவும், புலனாய்வு செய்வதற்காகவும், அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காகவும் மற்றும் அவரைத் தண்டிப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானவொரு சட்டமூலம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் வர்த்தமானியில் கடந்த 15ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## தர்மபுரத்தில் சிறுவர் சந்தை















கிளிநொச்சி மாவட்டம், தர்ம புரத்தில் அமைந்துள்ள இலக்கணம் ஒன்று அரசினர் தமிழ் கலைவன் பாடசாலையில் நேற்று சிறுவர் சந்தை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் அனைத்தும் குறைந்த விலையில் விற்கப்பட்டதுடன் ஊட்டச்சத்துள்ளவைகளாகவும் இருந்தன.

(113)

காலைக்கதிர் Kalaikkathir

# சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய மக்களின் மனநிலை மாற வேண்டுமாம்

## அந்தத் துறைக்கான அமைச்சர் டயானா கூறுகிறார்

உள்நாட்டு உணவு கலாசாரம் இன்னும் சுற்றுலாத்துறைக்கு அறிமுகப்படுத்தாமல் இருக்கிறது. இதனை அறிமுகப்படுத்தாதவரை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய முடியாது. அத்துடன், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய எமது மனநிலை மாற வேண்டும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலா இராஜாங்க அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் -

நாட்டுக்கு அதிகம் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய துறையே சுற்றுலாத்துறையாகும். என்றாலும் கடந்த 5 வருடங்களில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல், கொவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமைகள் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருந்தது. என்றாலும் தற்போது நாடு படிப்படியாக ஸ்திரநிலைக்கு வருவதன் மூலம் சுற்றுலா பயணிகளின் வருகையும் தற்போது அதிகரித்துள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் சுற்றுலா பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்திருக்கிறது.

அத்துடன், ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது 3 விடயங்களாகும். அதில் உணவு, பானம் பிரதானமானதாகும். அதன் பிறகு தங்குவதற்கு வீடு மற்றும் ஆடை. அந்த வகையில் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வரும்போது அவர்கள் பல்வகையான உணவுவகைகளை உற்கொள்ள ஆசைப்படுவார்கள். எமது நாட்டுக்கு என உணவு கலாசாரம் ஒன்று இருக்கிறது.

ஆனால் எமது உணவு கலாசாரம் இதுவரை சுற்றுலா பயணிகளுக்கு அறிமுகப்படுத்தப்படாமல் இருக்கிறது. எமது உணவு கலாசாரம் சுற்றுலாத்துறைக்கு அறிமுகப்படுத்தாதவரை எமது சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்ய முடியாது.

அதேபோன்று, எமது நாட்டில் இருக்கும் ஹோட்டல் பாடசாலைகளின் கல்வி பட்டப் படிப்பு வரை கொண்டுசெல்ல வேண்டும். ஹோட்டல் தொழிற்சாலை தொடர்பான பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன. ஹோட்டல் பாடசாலைகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். அதேபோன்று சுற்றுலா பிரதேசங்களில் இரவு வியாபார நிலையங்கள் அதிகரிக்கப்படவேண்டும். ஆனால் எமது நாட்டில் இரவு 10 மணியுடன் வியாபார நிலையங்கள் மூடப்படும் நிலையே இருந்து வருகிறது. இந்த நிலை மாறவேண் டும்.

அத்துடன், நாட்டில் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்ய நாட்டு மக்களின் மன நிலை மாறவேண்டும். நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக பல தடவைகள் தெரிவித்திருக்கிறேன்.



ஆனால் எமது நாடாளுமன்றத்தில் தற்போது இருப்பவர்களில் ஒரு சிலர் நாடாளுமன்றத்தில் இருப்பதைவிட வீடுகளில் இருப்பது நல்லது. அதனால் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்ய தேவையான வழிகாட்டல்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகளை நாடாளுமன்றமே மேற்கொள்ள வேண்டும். - என்றார். (05)

# ஐக்கிய அரசு இராச்சியத்திலிருந்தபடி இங்கு குற்றங்களில் ஈடுபடுகின்றனர்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றச்சாட்டு

இலங்கையில் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெருமளவானவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தே செயற்படுகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அவர்களை இலங்கைக்கு கொண்டுவந்து சட்டநடவடிக்கை எடுப்பது குறித்து ஐக்கிய அரபு இராச்சியத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் குறிப்பாக டுபாயில் வசிக்கின்றனர். தங்கள் சகாக்கள் மூலம் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களை கண்டுபிடிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பியவேளை அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்தின் அதிகாரிகளை தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எத்தனை பேர் அங்குள்ளனர் என்ற கேள்விக்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ளனர் எனினும் துல்லியமான எண்ணிக்கைதெரியாதுஎன டிரான் அலெஸ்தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முதல் காலாண்டு பகுதியில் 35 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (05)

# காத்தான்குடியில் பட்டப் பகல்வேளை வீட்டை உடைத்து திருடியவர் கைது





பட்டப் பகலில் வீட்டை உடைத்து 28 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத் தாலியை திருடிய 26 வயது நபரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ். ஏ. ரஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஆரையம்பதி ஊர்வீதியில் உள்ளஓய்வுபெற்றகல்விப்பணிப்பாளர் ஒருவரின் வீட்டை உள்ளே நுழைந்து அலுமாரியை உடைத்து அங்கிருந்த 28 லட்சம் ரூபா பெறுமதியான தங்க தாலியை திருடிய நபரை காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரிரஹீம்தலைமையிலான பொலிஸ் குழுவினர் திங்கட்கிழமை இரவு கைது செய்தனர்.

கடந்த 12 ஆம் திகதி காலை தனது வீட்டை பூட்டிவிட்டு மட்டக்களப்பில் உள்ள தனது மகளின் வீட்டுக்குச் சென்று மீண்டும் அன்றைய தினம் பகல் 2 மணிக்கு வீட்டுக்கு வந்து பார்த்தபோது முன் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடன் அலுமாரியை உடைத்து தாலிக்கொடியை திருடி இருப்பது தெரியவந்துள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து குற்ற தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் மூலம் காத்தான்குடி டீன் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார் எனக் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

# அமெரிக்க தூதரகம் ஓரவஞ்சனையாக செயற்படுகிறது என வீரசேகர விசனம்



அமெரிக்க தூதரகத்தால் தனக்கு வீசா வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளமை அமெரிக்காவின் ஓரவஞ்சனை செயற்பாடு என விசனம் வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, இலங்கையில் ஒரு குறிப்பிட்ட குழுவினரை இலக்கு வைத்து அமெரிக்கா இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர, அமெரிக்காவின் வாஷிங்டனில் அடுத்தமாத இறுதியில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வீசாவுக்கு விண்ணப்பித்திருந்த நிலையில், அவருக்கு விசா வழங்குவதை அமெரிக்கா தவிர்த்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாம் நாட்டைப்பற்றியும், நாட்டின் சுயாதீனத்தன்மை பற்றியும் பேசுகின்றமையால் அமெரிக்கா எமக்கெதிராக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டு எமக்கு வீசா மறுக்கப்பட்டிருக்கலாம். நான் இதற்கு முன்னர் அமெரிக்காவில் பயிற்சிகளைப் பெற்றிருக்கின்றேன். அவ்வாறிருந்தும் தற்போது எனக்கு வீசா வழங்க மறுத்துள்ளனர். தமிழ் டயஸ்போராக்களின் வாக்குகளையே இவர்கள் இதன் மூலம் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கியதன் காரணமாகவே அமெரிக்கா இவ்வாறு எமக்கெதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. முன்னாள் விமானப்படை தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

வீசா வழங்குவதென்பது அமெரிக்காவின் உரிமையாகும். எனவே இவ்விடயத்தில் எம்மால் அழுத்தம் பிரயோகிக்க முடியாது. எவ்வாறிருப்பினும் ஒரே நாட்டுக்குள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாகப் பார்க்க முடியாது. ஆனால் இது போன்ற விடயங்களில் அமெரிக்கா ஓரவஞ்சனையாகவே செயற்படுகிறது. அதே போன்று யாரை அனுப்ப வேண்டும் என்றும் அவர்களால் கூற முடியாது. அது எமது உரிமையாகும்.

இவர்கள் மறைமுகமாக அரசாங்கத்தின் சுயாதீனத் தன்மையை மீது தாக்குதலை மேற்கொள்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அரசாங்கம் துணிச்சலுடன் செயற்பட வேண்டும். தனிப்பட்ட விவகாரங்களில் உங்களால் தலையிட முடியாது என்று அரசாங்கம், அமெரிக்காவுக்கு நேரடியாகக் கூற வேண்டும். -என்றார்.

அமெரிக்காவின் விவசாய திணைக்களம் மற்றும் ஜனநாயகத்துக்கான தேசிய நிறுவனம் ஆகியவை தற்போதைய நாடாளுமன்றத்தில் செயல்படும் ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர்களையும் வாஷிங்டனுக்கு பயிற்சி பட்டறையொன்றுக்கு அழைத்து செல்லதிட்டமிட்டுள்ளன. இதற்காக துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனைத்து தலைவர்களும் விசாவைப்பெறவேண்டும்என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் தேசிய பாதுகாப்புமேற்பார்வைக்குழுவின் தலைவருக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் விசா வழங்கப்படவில்லை. அதற்கமைய வாஷிங்டன் விஜயத்துக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர்கள் பட்டியலில் இருந்து தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார்மேற்பார்வைகுழுவின் தலைவர் சரத் வீரசேகரவின் பெயர் நீக்கப்பட வேண்டும் என்றும், வேறு ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் செயலமர்வு ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (05)

# பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

புளத்சிங்களவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்கு-வரத்துச் சபை பஸ்ஸிலிருந்து ஒருவர் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

புளத்சிங்கள, கலஹேன பிரதேசத்தில் வசிக்கும் கொக்கல ஆராச்கே ரம்ய குமார என்ற 42 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புளத்சிங்கள நாரகல பிரதேசத்தில் பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்த இவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி ஹொரண ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (05)

# சீதுவை மர்மச் சாவு தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை

சீதுவை அம்பலம்முல்ல பிரதேசத்தில் மர்மமான முறையில் உயிரிழந்ததாகக் கூறப்படும் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.62 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கடந்த சில நாள்களுக்குமுன்னர்ஹங்குராங்கெத்த பிரதேசத்திலிருந்து தொழில் தேடி அப்பகுதிக்கு வந்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (05)


தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூல வரைவின் பல சரத்துக்கள் அடிப்படை சட்டவாட்சிக் கோட்பாடுகளுக்கு முரணானவை

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூல வரைவின் பல சரத்துக்கள் அடிப்படை சட்டவாட்சிக் கோட்பாடுகளுக்கு முரணான வகையில் அமைந்துள்ளன.

எனவே அனைத்துப் பிரஜைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக அளித்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இலங்கை இச்சட்டவரைவைத் திருத்தியமைக்கவேண்டியது அவசியமென சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கத்தால் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின்உள்ளடக்கம்தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் பற்றிய பரிந்துரைகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு கடந்த மே மாதம் 2 ஆம் திகதி நீதியமைச்சு அறிவித்தது. இவ்வாறானதொருபின்னணியில்ஏற்கனவே வெளியிடப்பட்ட வரைவில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரான சட்டமூலம் கடந்த 15 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இருப்பினும் திருத்தங்களுடன்கூடிய இப்புதிய வரைவின் 3 ஆவது சரத்தில் 'பயங்கரவாதம்' என்ற பதத்துக்கு விரிவான வரைவிலக்கணம்வழங்கப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்பு செயலாளரின் உத்தரவின்பேரில் மாத்திரம் ஒருவரை இரண்டு மாதங்கள் வரை தடுத்துவைப்பதற்கு இடமளிக்கப்படுவதன் மூலம் நீதித்துறையின் அதிகாரங்கள் வலுவிழக்கச்செய்யப்படுவதாகவும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவின் சட்ட மற்றும் கொள்கைப் பணிப்பாளர் லான் செய்டர்மன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'தடுப்புக்காவல் உத்தரவைப் பரிசீலனை செய்வதற்கான நீதிவானின் அதிகாரம் மட்டுப்படுத்தப்படுவதுடன், பயங்கரவாதம் எனும் பதத்துக்கான பரந்துபட்ட வரைவிலக்கணமானது அடிப்படைசட்ட ஆட்சிக் கோட்பாடுகளுக்கு முரணானவகையில் அமைந்துள்ளது. எனவே அனைத்துப் பிரஜைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக இலங்கை அளித்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றவேண்டுமெனில் இச்சட்டவரைவு மேலும் திருத்தியமைக்கப்படவேண்டியது அவசியமாகும்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலவரைவின் சில சரத்துக்கள், அரசமைப்பின் 13 ஆவது சரத்துக்கும், இலங்கை கைச்சாத்திட்டிருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசசமவாயத்தின் 9 ஆவது சரத்துக்கும் முரணானவகையில் அமைந்திருப்பதாகவும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

'இலங்கையானது பயங்கரவாத எதிர்ப் புச்சட்டம் போன்ற விசேட சட்டங்களை நீக்கிவிட்டு, சட்டவாட்சியுடன் முரண்படாத குற்றவியல் சட்டத்தின் ஊடாக பயங்கரவாதக்குற்றங்களைக் கையாள்வதற்கு முன்வரவேண்டும். இல்லாவிடின் குறைந்தபட்சம் தற்போது வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்பதாக அதனை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைப்பதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று லான் செய்டர்மன் வலியுறுத்தியுள்ளார். (05)

# ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவையில்லை

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் ரங்கே பண்டார கூறுகிறார்

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் விசாரணையை மேற்கொள்ள உள்நாட்டில் சிறந்த விசாரணை அதிகாரிகள் இருக்கும்போது அதனைசர்வதேசவிசாரணைக்கு கொண்டு செல்லத் தேவையில்லை.



குண்டுத்தாக்குதல்தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கியதேசியகட்சிதலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரி விக்கையில் –

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள சர்வதேசத்துக்கு வழங்கவேணடும் என எதிர்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர்.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது எமது அரசாங்கத்திலாகும். அதனால் இந்தத்தாக்குதல் தொடர்பான பின்னணியை அறிந்துகொள்ளும் தேவை எமக்கு இருக்கிறது. என்றாலும் இது தொடர்பாக ஏற்கனவே இரண்டு விசாரணைகள் இடம்பெற்றிக்கின்றன. ஹ்தலாகம் குழுவின் விசாரணை அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சர்வதேசம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாறான நிலையில் எமது நாட்டில் திறமையான விசாரணையாளர்கள் இருக்கும்போது நாங்கள் ஏன் இதனை சர்வதேசவிசாரணைக்கு வழங்க வேண்டும்.

எமது நாட்டில் முறையாக விசாரணை இடம்பெறவில்லை என்றால், எமது நாட்டு விசாரணை அறிக்கையை சர்வதேசம் மறுத்திருந்தால் அப்போது எங்களுக்கு இது தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு செல்வது குறித்து ஆராயலாம். அத்துடன், பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் நம்பத்தகுந்த உள்நாட்டுவிசாரணைஇடம்பெறுமாக இருந்தால் குண்டுத்தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியப்படாது எனத் தெரிவித்திருக்கிறார்.

அதனால் ஏற்கனவே இரண்டு விசாரணைகள் இடம்பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படுள்ள நிலையில் தற்போது ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க3பேர்கொண்டு விசாரணைக்குழுவொன்றை நியமித்திருக்கிறார். அதே போன்று நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

எனவே, இந்த விசாரணைக் குழுக்களின் அறிக்கைகளில் தெரிவிக்கப்படும் விடயங்கள் மற்றும் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இருக்கும் தாமதமே உள்நாட்டு விசாரணையின் நம்பகத்தன்மை தொடர்பில் சந்தேகம் எழுவதற்கு காரணமாகும். அதனால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் முறையாக விசாரணை மேற்கொண்டு சூத்திரதாரிகள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். – என்றார். (05)

# யானையில் ஊர் வலம் வந்த பிள்ளையார்



புதுக்குடியிருப்பு ஆலய வேட்டை திருவிழாவின்போது விநாயகர் யானையில் மீது ஊர்வலம் வந்தார்.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ளது உலகளந்த பிள்ளையார் ஆலயம். தற்போது திருவிழா இடம்பெற்றுவரும் இந்த ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை 7 ஆம் திருவிழா. வேட்டைத்திருவிழா.

பாரம்பரியமாக இந்த ஆலய வேட்டை திருவிழா துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து பக்தர்கள் புடைசூழத் தொடங்கும். இந்த முறை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து யானையில் பிள்ளையார் வேட்டைக்குப் புறப்பட்டார். துர்க்கா வீதி வழியாக யானையில் வலம் வந்தபடியே உலகளந்த பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்தார்.

இந்த வேட்டை திருவிழாவில் வேடுவர் வேடம் தரித்து அடியவர்கள் தமது நேர்த்தி கடன்களை நிறைவேற்றினர்.

இதற்கு முன்னர் எந்தவொரு ஆலயத்திலும் இப்படி யானையில் வேட்டைத் திருவிழா இடம்பெற்றதில்லை என்று பக்தர்கள் தெரிவித்தனர்.

# விசேட தேவையுடையோர் உரிமை பாதுகாப்பு சட்டமூலம் திருத்தப் பரிந்துரைகள் நீதியமைச்சுக்கு அனுப்பி வைப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவால்

விசேட தேவையுடையோரின் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலவரைவில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் அடங்கிய பரிந்துரை களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளது. மேற்குறிப்பிட்டவாறு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக் கப் பட்டுள்ள பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு –

விசேட தேவையுடையோரின் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலத்தின் வரைவு கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி உங்களது அமைச்சால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டவரைவைத் தயாரிப்பதற்கான முயற்சிகளைப் பெரிதும் வரவேற்கும் அதேவேளை, 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10(சி) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள ஆணையை ஆணைக்குழு நிறைவேற்றுவதற்கு உங்களது அமைச்சால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பைப் பாராட்டுகின்றோம். இச்சரத்தானது புதிய சட்டங்களைத் தயாரிக்கும் பணிகளில், மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேலும் மேம்படுத்துவதற்கு ஏதுவான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் அரசாங்கத்துக்கு வழங்குவதற்கான ஆணையை ஆணைக் குழுவுக்கு அளித்துள்ளது.

இச்சட்டமூலம் விசேட தேவையுடையோரின் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின்கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகின்றோம். அதற்கமைய விசேட தேவையுடையோரின் உரிமைகளைப் பூரணமாக வழங்குவதற்கும், பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்குமானசெயற்திறன்வாய்ந்த சட்டக்கட்டமைப்பை உருவாக்குவதை இச்சட்டமூலம் முன்னிலைப் படுத்தியுள்ளது.

அந்தவகையில் இச்சட்டமூலத்தை மேலும் வலுப்படுத்துவதை முன்னிறுத்தி சில பொதுவான பரிந்துரைகளை முன்வைக்கவிரும்புகின்றோம். அதன்படி குறிப்பாக 'நியாயமான தங்குமிடம்' என்பதற்கான வரையறையானது இவ்விடயத்தில் அரசுக்கு உள்ள கடப்பாட்டை நிர்ணயிக்கும் வகையில் செயற்திறன்மிக்கவாறு ஒருங்கிணைக்கப்படவேண்டும்.

அதேபோன்று விசேட தேவையுடைய பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகங்கொடுக்கின்ற பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகளுக்கான தீர்வுகள் இச்சட்டமூலத்தில் விரிவாக உள்வாங் கப்பட வேண்டும். வயது மற்றும் பால் அடிப்படையிலான பாகுபாடின்றி விசேட தேவையுடைய அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசின் கடப்பாட்டை முன்னிறுத்துவதாக அது அமையவேண்டும்.

மேலும் விசேட தேவையுடையோருக்கான தேசிய பேரவையின் அதிகாரங்கள் மற்றும் அப்பேரவைக்கான நியமன செயன்முறை என்பன உரியவாறான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக குறித்த சட்டமூலம் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் முக்கிய சில சரத்துக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகள் என்பனவும் அதில் உள்ளடங்குகின்றன. (05)

# படுகாயங்களுடன் ஆண் மன்னார் வீதியில் மீட்பு

மன்னார் - உயிலங்குளம், நெடுங்கண்டல் பிரதான வீதியில் பலத்த காயங்களுக்கு உள்ளான நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் அடம்பன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நெடுங்கண்டல் பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியின் பின்னர் நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

மீட்கப்பட்ட குறித்த நபர் அடம்பன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டவர் அடம்பன் தாமரைக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிய வருகிறது.

குறித்த நபர் விபத்திற்கு உள்ளானாரா? அல்லது தாக்குதல் சம்பவமா? என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் அடம்பன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (05)


வட மாகாண
சுற்றுலாப் பணியகமும்
தொழிற்துறைத் திணைக்களமும்
இணைந்து நடாத்தும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்ப்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2023இல் வெளியிடப்பெற்றது.